DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY



29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1514 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 11, 2025


# ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் ஒன்றாரியோ பல்லினக் கலாச்சார அமைச்சின் பாராளுமன்றச் செயலாளராக நியமிக்கப்பெற்றார்



## MPP Aris Babikian Appointed as Parliamentary Assistant to the Minister of Citizenship and Multiculturalism of Ontario

ஒன்றாரியோ மாகாண அரசின் ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் உறுப்பினரும் ஈழத்தமிழர்களுக்காகவும் அவர்களுக்கு எதிராக இலங்கையில் ஏவிவிடப்பட்ட அடக்கு முறைகளுக்கு எதிராகவும் இனப்படுகொலைகளுக்கு எதிராகவும் அனைத்து மேடைகளிலும் குரல் கொடுக்கும் அரிஸ் பாபிகியன் அவர்களை ஒன்றாரியோ மாகாணத்தின் குடியுரிமை மற்றும் பல்லினக் கலாச்சார அமைச்சின் செயலாளராக மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள் நியமித்துள்ளார்.



# ReMax Community Realty Inc Brokerage வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் 3வது விற்பனை அலுவலகத்தின் திறப்பு விழா

**ReMax Community Realty Inc Brokerage** என்னும் வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் 3வது பிரதான விற்பனை அலுவலகத்தின் திறப்பு விழா. கடந்த சனிக்கிழமை 5ம் திகதி மதியம் 282, **Consumers Road Unit 1 North York** என்னும் விலாசத்தில் அமைந்து வசதிகள் பல நிறைந்த கட்டடத்தில் நடைபெற்றது. மேற்படி "சுநஆயஒ ஊழஅஅரனைவல சுநயடவல ஐஉெ டீசழமநசயபந, நிறுவனத்தின் தலைவர் திரு ரஜீவ் கோணேஸ்வரன் திறப்பு விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தார்.

நாடா வெட்டும் வைபவத்தில் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களோடு ரஜீவ் கோணேஸ் அவர்களின் தந்தையார் திரு கோணேஸ்வரனும் இணைந்து அலுவலகத்தைத் திறந்து வைத்தனர். (தொடர்ச்சி 17ம் பக்கம்)

# நெருக்கடியான காலகட்டங்களில் ஒன்றாறியோ மாகாணத்தில் வேலைகள் மற்றும் வியாபாரங்களைப் பாதுகாக்க 11 பில்லியன் ஒதுக்கீடு



ஒன்றாரியோவின் முதல்வர் டக் ∴போர்டின் தலைமையின் கீழ், வரிகளால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் வியாபார நிறுவனங்களை ஆதரிப்பதற்காக ஒன்றாறியோ அரசாங்கம் 11 பில்லியன் டொலர்களை அவசர நிவாரணத்தை வழங்குவதற்கு ஒதுக்கியுள்ளது. இதில் மாநில வரிகளை ஆறு மாதங்களுக்கு ஒத்திவைத்தல், நிதி உதவியாக 80,000 வியாபார நிறுவனங்களுக்கு 9 பில்லியன் டொலர்கள் நிவாரணத்தைத் வழங்குவது ஆகியவை அடங்கும்.

இது தொடர்பாக தனது கருத்துக்களை தெரிவித்த அமைச்சர் விஜய் தணிகாசலம் பின்வருமாறு கூறினார்.

"எங்கள் அரசாங்கம் ஒன்றாறியோ முழுவதும் தொழிலாளர்கள் மற்றும் வியாபார உரிமையாளர்களுக்குத் துணையாக நிற்கிறது. இந்த தீர்க்கமான நடவடிக்கைகள் அவர்களுக்கு இன்று தேவையான ஆதரவையும், நாளைக்குத் தேவையான உறுதித்தன்மையையும் அளிக்கிறது" என்றார்.


SHIYARA FINANCIAL SERVICES
(An Agency for the Real Estate, Mortgage & the Finance)
வீடு-வியாபார நிலையங்கள் வாங்க, விற்க
Mortgages - Refinancing
Equity Line of Credit
Personal - Business Loans
Line of Credits - Credit Cards
Debt Consolidation
கிருஷ்ணா - KRISHNA
(647) 308-6069
shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025

# உதயன் சர்வதேச விருது விழா 2025

UTHAYAN
உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards-2025

**Date:** Saturday, June 14th, 2025
**Time:** 6:00 PM
**Venue:** The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4

## This Year's Awards Are:
## இவ்வருடத்திற்குரிய விருதுகள்

Uthayan Literary and Artistic Exuberance Award
Uthayan Inter-Communal Relationship Award
Uthayan Business Entrepreneur Award - Ontario
Uthayan Business Entrepreneur Award - Quebec
Uthayan Leadership Award
Uthayan Youth Icon Award
Uthayan Lifetime Achievement Award - Sri Lanka
Uthayan Lifetime Achievement Award - Tamil Nadu

For More Information: 416-732-1608 / 647-762-9512

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# எம் இனத்திற்காக தம் இன்னுயிர்களை ஈந்தவர்கள் விண்ணுலகிலிருந்து கண்ணீர் வடிப்பார்கள்!

ஈழத் தமிழர்கள் ஒரு கல்விச் சமூகமாகவும் கற்றவர்களின் சமூகமாகவும் தம்மை நீண்ட காலமாக தக்க வைத்துக் கொண்டவர்கள். கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் அவர்கள் கொடுத்த முக்கியத்துவமே அவர்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாத்திரமல்ல, முழு இலங்கையிலும் பரந்து வியாபித்து கல்வியினால் தான் பெற்ற உயர் பதவிகளில் அமர்ந்திருந்து தென்னிலங்கை மக்களாலும் போற்றப்பட்டு வந்தார்கள்.
இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்ற அநுர குமார திசநாயக்க அவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் உலகில் பாதணிகளை கழற்றி வைத்து விட்டு மக்கள் உள்ளே செல்லும் நூலகம் ஒன்று இருக்குமானால். அது யாழ்ப்பாண நூலகம் ஒன்றே என்று குறிப்பிட்டார். அவ்வாறாக தங்கள் பண்பாட்டையும் கல்வியையும் சமாந்தரமாக பேணியவண்ணம் உயர்ந்த நிலையை அடைந்தவர்கள் தமிழ் மக்கள் என்று மேலும் புகழாரம் சூட்டினார் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க.

ஆனால் இன்று எம் ஈழத்தமிழ் இனம் வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் மலையகத்திலும் அரசியல் என்னும் தளத்தில் நின்று எவ்விதமான கல்வி அறிவு அற்றவர்கள் போன்றும் தங்கள் பண்பாட்டைப் பேணாதவர்கள் போன்றும் பதவிகளுக்காக அற்பத்தனமான ஆசைகளை சுமந்து கொண்டு “மௌன யுத்தம்“ ஒன்றை தங்களுக்குள் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.
ஒரு மொழி பேசுகின்றவர்களாகவும் ஒரே பண்பாட்டை கடைப்பிடிக்கின்வர்களாக ஒற்றுமையாக வாழ வேண்டிய எம் மக்கள் கட்சிகளாகப் பிரிந்து நின்று “காடையர்களின்“ பின்னாலும் பதவி ஆசை கொண்டவர்களாலும் வழி நடத்தப்படுவதை விண்ணுலகிலிருந்த பார்க்கும் எம் இனத்திற்காக தம் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்கள் நிச்சயம் விண்ணுலகிலிருந்து கண்ணீர் வடிப்பார்கள் என்றே நான் வெட்கித் தலைகுனிய வேண்டும்.
“இந்த அற்பர்களுக்காகவா நாம் இத்தனை ஆயிரம் ஆயிரமாக மண்ணில் வீழ்ந்து மடிந்தோம். எம் சொந்தங்களை இழந்தோம்! எம் இளம் வயது சுகத்தையும் சுதந்திரத்தையும் இழந்தோம்! நாம் சுமந்து திரிந்த கனவுகளை மறந்தவர்களாக மக்களுக்காக மடிந்தோம்!. அந்த மக்கள் நாம் வழி நடத்துகின்றோம் என்று தங்களை தலைவர்களாகக் காட்டிக் கொண்டவர்கள். தற்போது எம் மண்ணின் மகத்துவத்தை சிதைக்கின்றார்களே! என்று விண்ணுலகிலிருந்து நம் மண்ணை எட்டிப் பார்ப்பது போல் தெரிகின்றது அல்லவா?
எம் மக்களுக்கு எப்போது வந்தது இவ்வாறான கீழ்த்தரமான அற்ப ஆசைகள? நாம் கேள்விகளை அவர்கள் முன்பாக எழுப்புவதற்கு தயாராக இருக்க வேண்டும்.. மதுச்சாலைகளை நடத்தும் அனுமதியை அரசாங்கத்திடமிருந்து பெற்று அவற்றின் மூலம் நம் மக்களையும் மாணவச் செல்வங்களையும் சீரழிக்க தயாராக இருந்த “தாடி“ வைத்த தலைவர்களும் ஆசிரியப் பதவிகளை வகித்தவர்களும் மீண்டும் தாங்கள் மேற்கொண்ட துரோகத் தனங்களை மறந்து மக்கள் முன்னாள் “எனக்கு வாக்களியுங்கள்“ என்று வருவதற்கு தயாராகிவிட்டார்கள்.

அரசியல் பதவிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அதிகாரப் பலத்தையும் அதோடு இணைந்து நிதிப் பலத்தையும் மீண்டும் அனுபவிக்க அவர்கள் மீண்டும் தயாராகிவிட்டார்கள். எங்கள் மண்ணில் மக்களையும் மண்ணையும் காப்பாற்றுவதற்காய் ஒரு தீரமிக்க விடுதலைப் போராட்டம் நடந்தது என்பதற்கு எவ்வித சான்றுகள் இல்லாமல் செய்யும் “பாதகமான் காரியங்களை நம் மண்ணில் இந்த அரசியல் கயவர்கள் அரங்கேற்றத் தயாராகிவிட்டார்கள்.
நாம் எங்கள் மண்ணில் மக்களையும் மண்ணையும் காப்பாற்றுவதற்காய் போராடிய மாவீரர்களின் கண்ணீரை நிறுத்தச் செய்யும் ஒரே வழி!. அவர்களை தேர்தல் களத்திலிருந்து அகற்றுவதே ஆகும். அவ்வாறானவர்களை சரியாக அடையாளம் கண்டு தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தடுப்பதும் எம் முன்னால் உள்ள ஒரு சவால்கள் நிறைந்த ஒரு பணியாகும்.

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728

Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?

Not to Worry!
Please Call
Theven Kankesu
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
tvn28@hotmail.com
thevenk1.tk@gmail.com

ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION - (OSTBA)
EST. 2012. REG: NOT FOR PROFIT ORGANIZATION #1866873, ONTARIO, CANADA
Mailing address: P.O.Box 48068 (Dundas & Sheppard Intersection) Mississauga ON L5A 4G8

OSTBA ANNUAL GENERAL MEETING 2025 (HYBRID MEETING)
Date: Monday, June 02, 2025 – 10am to 1pm
Via Zoom link: 647 795 05 04
Pass Code: 29 29 29
Venue: Mississauga Valley Community Centre
1275, Mississauga Valley Blvd, Mississauga, Ontario, L5A 3R8
Time: 10.00 am to 1pm

Agenda:
1. Registration of members in good standing
2. Canadian National Anthem
3. Tamil Thaai Vaalthu
4. A minute silence remembering our deceased members
5. Adoption of the minutes of A.G.M held in 2023
6. President's Address
7. Secretary's Annual Report
8. Audited Financial Statements - April 01.2024 to March 31. 2025
9. Election of Board of Trustees
10. Discussion of any resolutions
11. A.O.B

Resolutions forms are available on our website ostb5.ca under documents.
Members attending the AGM through ZOOM will require to have their video on with their name.

Mr. T.Sivaloganathan, Board Secretary (OSTB A)
Mr. Esa Para Esananda, Board President (OSTBA)
Phone 416-473-6880 Email: ostba2019@gmail.com


தமிழர் புத்தாண்டான பிறக்கும்
விசுவாவசு வருடம், அனைவர்
வாழ்விலும் வசந்தங்களைக்
கொண்டுவரும் ஆண்டாக அமைய
அனைவருக்கும், உளம் நிறைந்த
Happy Puthandu
இனிய சித்திரைப்
புத்தாண்டு வாழ்த்துகள்
RAYMOND CHO
MPP - SCARBOROUGH NORTH
Working For You
4559-B Sheppard Ave E, Scarborough
416-297-5040 | raymond.choco@pc.ola.org
raymondcho.ca
Ontario



# வடக்கு கிழக்கை ஜே.வி.பியுமா சிங்கள மயமாக்குகின்றது?

இலங்கை செய்திகள் Sri Lanka News

- ந.லோகதயாளன்

வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள நிர்வாக மையங்களில் அதிகளவு சிங்களவர்களை நியமிப்பதில் தற்போதைய அநுர அரசும் அதி தீவிரம் காட்டுகின்றது. முன்னைய அரசாங்கங்களிலும் மிகவும் முனைப்பான முறையில் இந்த "திட்டத்தை" அமுல் செய்வதில் கவனம் செலுத்துவதாகவும் அறியப்படுகின்றது.

இதில் குறிப்பாக முதலில் கிழக்கு மாகாணமே குறிவைக்கப்படுகின்றதோடு அது வடக்கிற்கும் காய் நகர்த்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. கிழக்கின் பல்கலைக்கழகத்தின் பேரவையின் (University Council) 15 வெளிவாரி உறுப்பினர்களில் 7 இடங்களுக்கு சிங்கள உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு விட்டமை இதற்கு முதல் உதாரணமாகும். அங்கே 5 தமிழ் உறுப்பினர்களும் 3 முஸ்லிம் உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளதனால் ஒரு முஸ்லீம் எந்த தீர்மானத்தை எடுத்தாலும் வெளிவாரிப் பேரவையின் முடிவு அதுவாக மாறும்.

இதேபோன்று கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நியமனங்கள், துணைவேந்தர் தெரிவு, விரிவுரையாளர்களை அமர்த்தவும் நீக்கவும் அதிகாரமுள்ள பேரவையில் சிங்கள உறுப்பினர்கள் முதல் முறையாக ஆதிக்கம் செலுத்த இருக்கின்றார்கள் இங்கே கிழக்கு பல்கலை கழகத்திற்கு மிக விரைவில் சிங்கள துணைவேந்தர் ஒருவரை நியமிக்க இருக்கின்றார்கள் எனவும் அபாயச் சங்கு ஊதப்படுகின்றது.

கிழக்கில் இந்த நிலையெனில் வடக்கும் இதற்கு விதிவிலக்கல்ல குறிப்பாக வவுனியா பல்கலைக்கழக பேரவையின் 7 வெளிவாரி உறுப்பினர்களில் இம்முறை 3 சிங்கள உறுப்பினர்களும் 3 தமிழர்களும் 1 முஸ்லிம் பிரதிநிதியும் நியமிக்கப்பட்டுள்ளனர் இங்கும் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நிலை ஏற்பட்டுவிட்டது.

சிங்கள மயமாகி விடுமோ என அஞ்சப்படும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பேரவையின் 15 வெளிவாரி உறுப்பினர்களில் 3 சிங்கள உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். இது எதிர் காலத்தில் எந்த நிலையை இட்டுச் செல்லும் என்பதும் கேள்விக்குறிதான். நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டும் என ஜே.வி.பி என்றுமே விரும்பி வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் கடந்த அரசு ஆளுநரை தமிழராக வைத்திருந்நமோதும் அநுர அரசு அதனை சிங்களவராக மாற்றியது. பிரதம செயலாளரும் சிங்கள அதிகாரியே நியமிக்கப்பட்டார். கிழக்கு மாகாண பொதுசேவை ஆணைக்குழுவின் தலைவராகவும் சிங்கள அதிகாரியே நியமிக்கப்பட்டுவிட்டார்.

நேர்மையான சமாந்தரமான நிர்வாகத்தை ஏற்படுத்துவோம் எனக் கூறி ஆட்சி பீடம் ஏறிய தேசிய மக்கள் சகதி அரசு இரகசியமாக சிங்களத் தேசியவாதிகளின் நிகழ்ச்சி நிரலையே முன்னெடுக்கின்றதற்கு இவை சிறந்த உதாரணங்கள்.

இத்தனைக்கும் மத்தியில் அநுர அரசில் எந்தவொரு இட ஆக்கிரமிப்புக்கள், திணிப்புக்கள் இடம்பெற மாட்டாது என அநுரா கூறியதை நம்பியே பலர் அக் கட்சிக்கு வாக்களித்தபோதும் திருகோணமலை குச்சவெளியில் வாழும் 431 குடும்பத்திற்காக 28 பௌத்த ஆலயம் உள்ளபோதும் அநுரா ஆட்சி பீடம் ஏறிய பின்பும் 3 பௌத்த ஆலயம் முளைத்திருப்பதாக அப் பகுதி மக்கள் மட்டுமல்ல தமிழ் அரசுக் கட்சியும் இதனை பாரதப் பிரதமரின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளனர்.

கிழக்கின் நிர்வாக நிலை இதுஎனில் வடக்கின் நிர்வாக நிலை வெளித் தெரியாத அபாயக் கட்டத்திலேயே உள்ளது அன்றி அவ்வாறே பேணுவதற்கு தற்போதைய அரசு விரும்புகின்றது. வவுனியா மாவட்டத்தில் சிங்கள ஆக்கிரமிப்புகளை அதிகம் எதிர்கொள்ளும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் பணியாற்றிய பிரதேச செயலாளர் இடமாற்றலாகிச் சென்றதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு புதியவரை நியமிக்காது அங்கே பணியில் இருந்த நிர்வாக சேவை தரம் 3ஐச் சேர்ந்த உதவிப் பிரதேச செயலாளரான சிங்கள அதிகாரி பதில் பிரதேச செயலாளராக பணியமர்த்தப்பட்டுள்ளார்.

இங்கே நிரந்தரமாகவும் ஓர் சிங்கள அதிகாரி பிரதேச செயலாளராக நியமிக்க பட இருக்கின்றார். இவ் நியமனங்கள் ஊடாக ஏற்கனவே சிங்கள மயப்படும் வவுனியா வடக்கு தமிழ் கிராமங்களின் எல்லைக்கோட்டின் வழி நகர்ந்து மணலாறு சிங்கள குடியேற்றங்களை இணைத்து சிங்கள ஆக்கிரமிப்புக் குடியேற்றத்தினை அதிகரிக்க முயற்சிக்கின்றார்கள் என்பது திடமாகின்றது.

அரசாங்கத்திற்கு கீழ் இயங்கும் 52 அரச நிறுவனங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ள தலைமை பதவி நியமனத்தில் எந்தவொரு தமிழ் அதிகாரிகளுக்கும் இடம் வழங்கப்படவில்லை. அநுர அரசாங்கத்தின் அமைச்சுக்களின் 27 செயலாளர்களில் இருவர் மட்டுமே தமிழர்கள். அத்துடன் 50 நாடுகளில் இயங்கும் இலங்கைக்கான தூதரகங்களில் தலைமை பதவிகளில் எந்தவொரு தமிழ் அதிகாரியும் கிடையாது. ஏன் ஜனாதிபதி அனுரா குமார திஸ்ஸநாயக்க நியமித்துள்ள கிளீன் சிறிலங்கா செயலணியில்கூட ஒரு தமிழ் அதிகாரி கிடையாது.

தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சுற்றுலா ஆலோசனை சபையிலும் தமிழர் கிடையாது. இத்தனைக்கும் மத்தியிலும் வடக்கு கிழக்கில் அநுர அரசிற்கு அதிகாரிகள் வால் பிடிக்காமல் இல்லை ஏனெனில் தலை அல்லாவிடினும் வால் ஏதும் கிடைக்கும் என்ற நப்பாசை விடவில்லை. இதேசமயம் வடக்கின் பிரதம செயலாளர் எதிர் வரும் 3 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளதனால் அந்த இடத்திற்கு ஒருவரை ஆளுநர் பரிந்துரைத்தாலும் ஆளும் கட்சியின் வடக்கின் நாட்டாமை அதற்கு இடமளிக்க மாட்டார் என்றே தெரிகிறது. ஏனெனில் வடக்கின் பிரதம செயலாளராக வருபவர் தகுதியானவராக இருப்பாரோ இல்லையோ அரசிற்கு தலையாட்டியாக இருக்க வேண்டும் என்றே அரச தரப்பினர் விரும்புகின்றனர்.

இதனால் அரசிற்கும் ஆளுநருக்குமான நெருக்கத்தில் நெருடல் ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை. ஏற்கனவே யாழ்ப்பாணம் அரச அதிபர் விடயத்தில் அரசுடன் நல்ல மனநிலையில் இருக்கும் ஆளுநர் இவ் விடயத்திலும் தோற்றுப்போவாராக இருப்பின் அப்பதவியை தக்க வைப்பார் என பலரும் நம்பவில்லை.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முல்லைத்தீவு கோட்டைக்கேணி – பறையனாறுவரையான வீதிச் சீரமைப்பு விரைவில் ஆரம்பம்



## எல்லைக்கிராம மக்களின் நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் மகிழ்ச்சி என்கிறார் ரவிகரன் எம்.பி

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் கோட்டைக்கேணி தொடக்கம், தென்னமரவடி பறையனாற்றுப் பாலம்வரையிலான வீதி சிரின்மையால் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், தென்னமரவடி பகுதி விவசாயிகள் பெருத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவந்தனர்.

இந் நிலையில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களது தொடர்கோரிக்கையயினையடுத்து குறித்த வீதியை சீரமைக்கும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந் நிலையில் அப்பகுதி விவசாயிகளின் அழைப்பை ஏற்று குறித்த பகுதிக்கூச் சென்ற வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் விவசாயிகளோடு இணைந்து சீர்செய்யப்படவுள்ள குறித்த வீதியைப் பார்வையிட்டிருந்தார். இதன்போது அப்பகுதி விவசாயிகளால் நாடாளுமன்ற உறுப்பினருக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய சூழலில் எல்லைக்கிராம விவசாயிகளின் நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில், கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள மக்கள் ஏறத்தாள 90வீதமானோர் விவசாயத்தை நம்பியே வாழ்ந்துவருகின்றனர்.

இந் நிலையில் இப்பகுதிகளிலுள்ள மக்களின் பெரும்பாலான விவசாயக் காணிகள் கடந்த கால இனவாத அரசுகளின் காலத்தில் பெரும்பான்மையின மக்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த 1984ஆம் ஆண்டு இப்பகுதிகளிலிருந்த தமிழ்மக்கள் இராணுவத்தினரால் கடந்த 1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு இராணுவத்தால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படும்போது, தற்போது பெரும்பான்மையின மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது பூர்வீக வயல் காணிகளில் நெற்செய்கை மேற்கொண்டிருந்ததாகவும், தம்மால் செய்கைபண்ணப்பட்ட நெல்லினை அறுவடை செய்யாமலேயே தாம் அங்கிருந்து இடம்பெயர்ந்ததாகவும் அப்பகுதி தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய சூழலில் தம்மால் செய்கைபண்ணப்பட்ட குறித்த நெற்செய்கைகளை பெரும்பான்மை இனத்தவர்கள் அறுவடைசெய்ததாகவும், அதனைத்தொடர்ந்து ஆமையன்குளம், மறிச்சுக்கட்டிக்குளம், முந்திரிகைக்குளம் உள்ளிட்ட தமிழ்மக்களின் பல பூர்வீக நீர்ப்பாசன நெற்செய்கை நிலங்கள் பெரும்பான்மையின மக்களால் அபகரிக்கப்பட்டதாகவும் அப்பகுதித் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு தமிழ்மக்களுடைய மானாவாரி நெற்செய்கை நிலங்கள் பலவற்றையும் பெரும்பான்மையின மக்கள் ஆக்கிரமித்து நெற்பயிற்செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவ்வாறானதொரு பாரிய ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் இப்பகுதித் தமிழ் மக்கள், பலத்த போராட்டங்களுக்கு மத்தியில், ஆக்கிரமிப்பிலிருந்து தப்பியுள்ள தமக்குரிய பூர்வீக மானவாரி நெற்செய்கை நிலங்களில் நெற்பயிற்செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

குறிப்பாக சிவந்தாமுறிப்பு, வெள்ளைக்கல்லடி, எரிஞ்சகாடு, சகலாத்துவெளி, நாயடிச்சமுறிப்பு, இறம்பைவெளி, மேல்காட்டுவெளி, கொக்குமோட்டை, பாலங்காட்டுவெளி, கீழ்காட்டுவெளி, ஆத்திமோட்டைவெளி, காயாமோட்டைவெளி, கன்னாட்டி, குறிஞ்சாடி, பெரியவெளி, பணிக்கவயல், அக்கரவெளி, மாரியாமுனை உள்ளிட்ட பூர்வீக மானாவாரி விவசாய நிலங்களில் தமிழ்மக்கள் பலத்த போராட்டங்களுக்கு மத்தியில் நெற்பயிற்செய்கை மேற்கொண்டுவருகின்றனர்.



இந்நிலையில் இந்த நெற்பயிற்செய்கைநிலங்களுக்கு சென்றுவருவதற்காக தமிழ் மக்கள் பயன்படுத்தும் வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றது.

எனவே நெற்பயிற்செய்கைக் காலத்தில் விவசாய உள்ளீடுகளை எடுத்துவருவதிலும், அறுவடைக்காலத்தில் அறுவடைசெய்யப்பட்ட நெல்லினை எடுத்துச் செல்வதிலும் இப்பகுதி விவசாயிகள் பலத்த இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக கடந்த பெரும்போக நெல் அறுவடையின்போது, அறுவடைசெய்த நெல்லினை எடுத்துவருவதில் பாரி சிக்கல்களை எதிர்நோக்கியிருந்தனர். அறுவடைசெய்யப்பட்ட நெல்மூட்டைகளை வெள்ளநீர் மூடிய அவல நிலைகளும் ஏற்பட்டன. வீதிச் சீரின்மையால் நீண்டதூரம் நெல்மூட்டைகளை சுமந்து செல்லும் நிலைக்கும் விவசாயிகள் தள்ளப்பட்டனர். இதனைவிட படகுகளினூடாகவும் நெல்மூட்டைகள் எடுத்துவரப்பட்ட நிலமைகளும் காணப்பட்டன. இவ்வாறு வீதி சீரின்றிக் காணப்படுவதால் அறுவடைசெய்யப்பட்ட நெல்லை எடுத்துவருவதற்கு மாத்திரமே பாரியளவில் பணம் செலவிடப்பட்டு விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்படுகின்ற, நட்டமடைகின்ற நிலைகள் காணப்படுகின்றது.

இத்தகைய சூழலில் குறித்த வீதியை சீரமைத்துத் தருமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தார்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டசெயலாளர், வடமாகாண ஆளுநர் ஆகியோரிடமும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்கள் இந்த வீதி சீரமைப்பு தொடர்பில் வலியுறுத்தியிருந்தார்.

இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்டசெயலாளர், வடமாகாண ஆளுநர் ஆகியோர் குறித்த இடத்திற்கு விஜயம் மேற்கொண்டு நிலமைகள் தொடர்பில் பார்வையிட்டிருந்தனர்.

இத்தகைய சூழலில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களுடைய தொடர்ச்சியான கோரிக்கைக்கு அமைவாக ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கின்ற எல்லைக் கிராமத் தமிழ் மக்களின் வயல் நிலங்களுக்குச் சென்று வருவதற்குரிய ஏறத்தாள 16கிலோமீற்றர் தூரமான வீதியைச் சீரமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்நிலையில் அப்பகுதி விவசாய அமைப்புக்களின் அழைப்பையேற்று அப்பகுதிக்குச் சென்ற வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சீரமைக்கப்படவுள்ள குறித்த வீதியைப் பார்வையிட்டதுடன், விவசாயிகளுடனும் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது வீதிச் சீரமைப்பிற்கு தொடர்ச்சியாக உரிய இடங்களில் குரல்கொடுத்தமைக்கு அப்பகுதி விவசாயிகளால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில், இவ்வீதி அமைக்கப்படவேண்டுமென்ற எனது தொடர்ச்சியான கோரிக்கைக்கு செவிசாய்க்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

இந்த வீதிச் சீரமைப்பு விடயத்தில் கரிசனையோடு செயற்பட்ட வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு மாவட்டசெயலாளர் அ.உ.மாமகேஸ்வரன் ஆகியோருக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அந்தவகையில் கட்டங்கட்டமாக இந்த வீதியைச் சீரமைப்பதாக உரியவர்களால் என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி முதற்கட்டமாக கோட்டைக் கேணியிலிருந்து, நாயடிச்சமுறிப்பு வரையிலும், அடுத்த கட்டமாக நாயடிச்சமுறிப்பிலிருந்து பறையனாற்றுப் பாலம் வரையிலும் வீதியைச் சீர்செய்வதெனத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாக உரியவர்களால் எமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக இந்த வீதி சீரமைக்கப்படுவது இப்பகுதி தமிழ் மக்களுக்கு பெரிய உதவியாக இருக்கும். தற்போது இப்பகுதியில் ஏறத்தாள 3000ஏக்கர்வரையில் மானாவாரி பயிற்செய்கை நிலங்களில் நெற்பயிற்செய்கை மேற்கொண்டுவருகின்றனர்.

இந் நிலையில் குறித்த வீதிச் சீரமைப்பையடுத்து இன்னும் மேலதிகமாக 1000ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்நிலங்களில் விவசாயிகள் நெற்செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலை ஏற்படும்.

எனவே இவ்வீதியைச் சீரமைப்பதற்குரிய அனுமதிகள் கிடைக்கப்பெற்றுள்ள சூழலில், விரைந்து இவ்வீதியைச் சீரமைப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார்.

# சூரிய ஒளி மின்சார இணைப்பு நிறுவுதல் கட்டணத்தை வாடிக்கையாளர்களிடம் அறவிட முடியாது!

## இ.மி.சபைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பணிப்பு

கூரைமேல் சூரிய ஒளி மின்சார இணைப்பு வழங்கும் போது, புதிய இணைப்பு மற்றும் கட்டமைப்புக்கான நிறுவுதலுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து கட்டணம் எதையும் கோர முடியாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் - சுன்னாகம் வாரியப்புலம் பகுதியைச் சேர்ந்த மின் பாவனையாளர் ஒருவர் 2023 ஆண்டு கூரைமேல் சூரிய ஒளி மின்சார இணைப்பு அனுமதிக்காக விண்ணப்பித்த போது, அவருக்கு அனுமதி வழங்காமல், 2024 ஆம் ஆண்டு விண்ணப்பித்த அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவருக்குச் செல்வாக்கின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படாத கட்டடத்துக்கு அனுமதி வழங்கியமை தொடர்பாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, முறைப்பாட்டாளருக்கு அனுமதியை வழங்குமாறு பணிக்கப்பட்ட பின்னரும், இணைப்புக்காக ரூபா 11 இலட்சம் செலுத்துமாறு யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகம் கோரியமையை ஆதாரங்களுடன் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவில், இலங்கை மின்சார சபை கூரைமேல் சூரிய ஒளி மின்சார இணைப்பு அனுமதி வழங்கும் போது, அந்தந்தப் பகுதிகளுக்கான மேலதிக புதிய இணைப்பு மற்றும் கட்டமைப்புக்கான நிறுவுதலுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து கட்டணம் எதையும் கோர முடியாது என்று இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளருக்கு மீண்டும் பணித்திருக்கிறது.

இதேநேரம், சுன்னாகத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தில் சூரிய ஒளி மின்சார இணைப்பு அனுமதி பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்களில் பலருக்கு அனுமதி வழங்கப்படாமை, அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர் பொருத்துவதில் பாரபட்சம் காட்டுதல் போன்ற முறைகேடுகள் குறித்து இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்துக்கும், மின் சக்தி வலு அமைச்சுக்கும், இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இது வரை பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

எனினும், இலங்கை மின்சார சபை அவற்றைக் கண்டும் காணாமல், முறையற்ற விதத்தில் பல அனுமதிகள் வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக அனுமதியை வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் உத்தரவிடப்பட்ட போதும், பிராந்திய மின் பொறியியலாளர் அவை குறித்துக் கவனமெடுக்காமல் தொடர்ந்தும் முறையற்ற விதத்தில் சோலர் அனுமதிகளை வழங்கி வந்துள்ளார் என்று முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தமிழர்களின் பிரச்சணைக்கு தீர்வு இருக்க முடியும் என்பதனை நம்புகின்றோம். எம்.ஏ.சுமந்திரன் மோடியிடம் எடுத்துரைப்பு



**- ந.லோகதயாளன்**

இழுவைமடியை தடை செய்து இலங்கையிலே சட்டத்தை இயற்றியுள்ளோம் அதேபோல் இந்தியாவிலும் சட்டமாக்கப்பட வேண்டும் எனக் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரியதாக தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு தாஜ்சமுத்திரா விடுதியில் கடந்த வாரம் தினம் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் சந்திப்பின் பின்னரான ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அங்கே அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில், சந்திப்பின் ஆரம்பத்தில் தமிழ் மக்களின் தலைவர்களாக நீண்ட காலம் சேவையாற்றிய இரா.சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா போன்றோருக்கு தனது அனுதாபத்தைத் தெரிவித்ததோடு கடந்த கால சந்திப்புக்களில் அவர்களும் பங்குகொண்டதை பிரதமர் மோடி நினைவுபடுத்தினார்.

“இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தமிழர்களின் பிரச்சணைக்கு தீர்வு இருக்க முடியும் என்பதனை நாங்கள் நம்புகின்றோம். ஓர் அர்த்தமுள்ள அதகாரப் பகிர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதிலே பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அதாவது 13 ஆம்திருத்தம்கூட முழுமையாக அமுல்படுத்தவில்லை. இரு அரசும் ஏற்றுக்கொண்ட ஓர் விடயம். 2010, 2011, 2012 ஆம் ஆண்டு ஆகிய மூன்று தடவைகள் இலங்கை இந்தியாவின் கூட்டறிக்கையிலும் 13ஐ கட்டி எழுப்பி அதன் மேல் ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கத்தை உருவாக்குவோம் எனச் சொல்லப்பட்டிருக்கின்றது அது இன்னமும் செய்யப்படவில்லை.

இவற்றை ஓர் புதிய அரசியல் யாப்பின் மூலமோ அல்லது என்ன விதத்திலும் ஓர் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். எமது கட்சியைப் பொறுத்த மட்டில் நாம் ஓர் சமஸ்டிக் கட்சி. ஓர் சமஸ்டி முறையில்தான் அர்த்தமுள்ள அதகாரப் பகிர்வு இருக்கும் என நம்புகின்றோம் அந்த இலக்கை அடையும் வரையில் தற போதுள்ள மாகாண சபை முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மாகாண சபைகளிற்கான தேர்தல் நடாத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது அது உடனடியாக நடாத்தப்பட வேண்டும். இதனை பாரதப் பிரதமர் மோடியும. கூறியுள்ளார். அதற்கும் நன்றி தெரிவித்தோம்.

மாகாண சபைத் தேர்தலை பிற்போட அரசு எத்தனிப்பதாக நாம் சந்தேகின்றோம் அது உடனடியாக நடாத்தப்பட வேண்டும் இந்தியா மட்டும்தான் இலங்கைத் தமிழர் விடயத்தில் எப்படியான தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதை இலங்கை அரசோடு இணங்கி ஓர் சர்வதேச ஒப்பந்தம் இன்றுவரை அமுலில் உள்ளது. அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய பாரம் இந்தியாவின் இடத்திலே இருக்கின்றது நாம் இந்தியாவிடம் அதனை எதிர்பார்க்கின்றோம் எனச் சொன்னோம்.

இதேபோன்று எங்களது மக்களின் நிலங்கள் அபகரிக்கும் விடயங்கள், இந்துக் கோயில்கள் இருந்த இடங்களில் பௌத்த விகாரைகள் கட்டப்படுகின்றது அதற்கான உதாரணங்களையும் கூறினோம். அப்படியான நிகழ்வுகள் இடம்பெறாமல் தடுப்பதற்கு இலங்கைக்கும் இந்தியாவிற்குமான தொடர்பாடல் அதற்காக இராமேஸ்வரம் ஊடான படகுச் சேவை பலாலி விமான சேவை போன்று வலுப்பெற வேண்டும். இந்திய மூலதனங்கள் இலங்கைக்கு வர வேண்டும் இந்தியாவிலே தற்போது அகதிகளாக வாழும் ஈழத் தமிழ் மக்கள் மீளக் குடியமர்வதற்கான நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும்.

இதேபோன்று இலங்கை இந்திய மீனவர்ள் பிரச்சணை மிக முக்கியமான பிரச்சணையாக இந்தியப் பிரதமரிடம் கூறியுள்ளோம். இழுவைப் படகு முறைமை சுற்றுச் சூழலிற்குப் பாதகமானது அது தடுக்கப்பட வேண்டும் என்று சுஸ்மா சுவராச் தலைமையில் டில்லியில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது 2016இல் இணக்கம் எட்டப்பட்டு கூட்டறிக்கையும் உண்டு. இணங்கிய விதமாக இந்த இழுவைப் படகு முறை முற்று முழுதாக தடுக்கப்பட வேண்டும். இலங்கையிலே சட்டத்தை இயற்றியுள்ளோம் இந்தியாவிலும் சட்டமாக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தோம். மீனவர்களின் பாதிப்புத் தொடர்பில் சித்தார்த்தன், கஜேந்திரகுமார் ஆகியோரும் எடுத்துரைத்தனர். அவர்களும் அரசியல் தீர்வு தொடர்பிலும் வலியுறுத்தினர் என்றார்.




# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.


Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

கனடிய செய்திகள்
Canadian News

# கனடிய "மக்கள் சேவையாளர்" பிரான்சிஸ் சேவியர் அடிகளார் இறைவனடி சேர்ந்தார்



தமிழீழ விடுதலைக்குரலாக 40 ஆண்டுகளுக்கு மேலாக கனடாவில் ஒலித்த குரல். கனடிய "மக்கள் சேவையாளர்" பிரான்சிஸ் சேவியர் அடிகளார் இறைவனடி சேர்ந்தார்.

கனேடிய புதிய குடிவரவாளர்களின் மேம்பாட்டிற்கு உழைத்த இந்த செயற்பாட்டாளர் பிரான்சிஸ் சேவியர் அடிகளார் தள்ளாத வயதிலும் குளிரிலும் வெயிலிலும் போராட்ட களங்களில் தவறாது கலந்து கொண்டு பங்காற்றிய அருட்பணியாளர் ஆவார்.

அன்னார் மீளாத்துயில் கொண்டதை கனத்த இதயத்துடன் பதிவு செய்கிறோம்.

பன்முக செயல்வீரர், செயல் திறனும், தமிழ்ச் சமூகத்தின் தொண்டனுமாகிய அடிகளார் பிரான்சிஸ் சேவியர் அவர்கள் 1984 இல் கனடாவில் கால்பதித்தார், அக்காலம் தொடக்கம் மக்கள் சேவையாற்றும் மகத்தான மனிதராகவும் வழிகாட்டியாகவும் விளங்கினார் ஓய்வின்றி மக்களுக்காக உழைத்தார். கியூபேக் தமிழர் ஒன்றியத்தின் தலைவராகவும், செயலாளராகவும் தொண்டாற்றி நியது மட்டுமல்லாமல், தமிழர்கள் மத்தியில் உளவளத்துறையிலும் பங்கு கொண்டு செயலாற்றினார். ரொறன்ரோவிலும் முன்னாள் உலகத் தமிழர் இயக்கத்திலும் அங்கத்தவராகவும், பல துறைகளிலும் செய லாற்றி ஈழத்தமிழர் முன்னேற்றத்திற்கு அரும்பாடுப்பட்டவர். அன்னார் புகழுடல் பார்வைக்கு April 9ம் திகதி மாலை 4மணி தொடக்கம் 9 மணிவரை Chapel Ridge Furnneral Home இறுதிச் சடங்குகள் நடைபெறும் மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டது.

# "அறிவும் ஆடலில் திறமையும் பாடக்கூடிய குரலழகும் அழகும் நிறைந்த மாதவி கோவலனுக்கு எழுதிய கடிதங்களை நாம் இலக்கியங்களாக நோக்கலாம்"

## உலகத் தமிழ்க் கலை இலக்கியப் பேரவை. டென்மார்க் அதன் கனடாக் கிளையோடு இணைந்து நடத்திய "தமிழரங்கம்" இணையவழி நிகழ்ச்சியில் "மாதவி வரைந்த மாண்புறு கடிதங்கள்" என்ற தலைப்பில் உரையாற்றிய ஆசிரியை நாகேஸ்வரி குமரகுரு தெரிவிப்பு



இளங்கோ அடிகளின் படைப்பிலக்கியமான "சிலப்பதிகாரத்தில் வரும் பாத்திரங்களான கண்ணகி. கோவலன். மாதவி மற்றும் வசந்தமாலை ஆகிய பாத்திரங்களில் நடனப் பெண் என்று அறியப்பெற்ற மாதவியானவள் பன்முக ஆற்றல் கொண்டவளாக விளங்கினாள். இவ்வாறான மாதவி அறிவும் ஆடலில் திறமையும் பாடக்கூடிய குரலழகும் அழகும் நிறைந்தவளாய் கோவலனுக்கு எழுதிய கடிதங்களை நாம் இலக்கியங்களாக நோக்கலாம். தனது முதலாவது கடிதத்தை கோவலனுக்கு எழுதிய அவள் கோவலனின் பதிலுக்காகக் காத்திருந்த வேளை அவன் அந்தக் கடிதத்தை கொண்டு சென்ற வசந்தமாலையிடமிருந்து பெற்றுக்கொள்ள மறுத்து விட்டான். ஆனால் தனது முயற்சியை கைவிடாமல் மாதவி மீண்டு இரண்டாவது கடிதத்தை எழுதுகின்றாள். இந்தக் கடிதம் தான் தமிழில் படிக்கப்பெற்ற முதலாவது கடிதம் எனடது சங்க இலக்கியங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாதவி எழுதிய கடிதங்கள் ஆழமான கருத்துக்களையும் அழகிய சொற்களையும் கொண்டிருந்தன. தனது முதலாவது கடிதத்தில் காதல் உணர்வை வெளிக்காட்டிய மாதவி பின்னர் தனது இரண்டாவது கடிதத்தை ஒரு தந்தைக்கோ அன்றி ஒரு அண்ணனுக்கோ அன்றி ஒரு ஆசிரியருக்கோ எழுதுவது போன்று வரைந்தாள். மாதவியின் அந்த இரண்டாவது கடிதம் தெளிவான கருத்துக்களைக் கொண்டிருந்தது".

இவ்வாறு மேற்படி "தமிழரங்கம்" இணையவழி நிகழ்ச்சியில் "மாதவி வரைந்த மாண்புறு கடிதங்கள்" என்ற தலைப்பில் உரையாற்றிய ஆசிரியை நாகேஸ்வரி குமரகுரு தெரிவித்தார். அவர் மாதவிக்கு புகழாரம் சூட்டி மகிழ்ந்தார். அவ்வேளையில் இணைய வழி நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் மாதவிமீது கொண்ட மரியாதை அதிகரித்திருக்கும் என்றே கூறலாம்.

கடந்த 30-03-2025 ஞாயிற்றுக்கிழமையன்று உலகெங்கும் பலநாடுகளிலிருந்து கலந்து கொண்ட கலை இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் இந்த தமிழரங்கம் நிகழ்வில் நீண்ட நேரம் பங்கெடுத்தனர்.

உலகத் தமிழ்க் கலை இலக்கியப் பேரவை. டென்மார்க் அமைப்பின் நிறுவுனரும் தலைவருமான திருமதி முல்லைநாச்சியார் தனது உரையில் டென்மார்க் தேசத்தில் ஆரம்பிக்கப்பெற்ற இந்த அமைப்பு தற்போது உலகெங்கும் தமிழ் ஆர்வலர்கள் வாழும் நாடுகளில் கிளைகளைக் கொண்டுள்ளது என்றும் இன்றைய நிகழ்வானது கனடாக்கிளையின் ஆதரவோடு கனடா வாழ் கலை இலக்கிய ஆர்வலர்களும் இளைய தலைமுறை மாணவ மாணவிகளும் பங்கெடுத்துள்ளமை பாராட்டுக்குரியது என்றார்.

வரவேற்புரை நிகழ்த்திய கனடா வாழ் இலக்கியவாதியும் கவிஞருமான அகணி சுரேஸ் அவர்கள் தனது உரையில் உலகின் பல நாடுகளிலிருந்தும் ஆர்வத்துடன் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து இளையோர் பலர் தங்கள் படைப்புக்களை இந்த நிகழ்வில் சமர்பிக்க முன்வந்தமை பாராட்டுக்குரியது என்றார்.

மேற்படி "தமிழரங்கத்தில்" கனடாவைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணவ மாணவிகள் நடனங்கள் மற்றும் பாடல்களை வழங்கினர். அத்துடன் "நான் தமிழ் படிக்க விரும்புகின்றேன்" என்ற தலைப்பில் ஒரு அணியினரும் "நான் தமிழ் படிக்க விரும்பவில்லை" என்ற தலைப்பில் எதிர்த் தரப்பு அணியினரும் கலந்து கொண்ட பட்டிமன்றம் நடைபெற்றது. அதற்கு நடுவராக செல்வி ஆராதணி இராஜ்குமார பணியாற்றினார்.. மேலும் கலாநிதி கவிதா சிவாகரன் இராஜரட்ணம் அவர்கள் "இன நல்லிணக்கமும் இலங்கைத் திருநாடும்" என்ற தலைப்பில் உரையாற்றினர்.



தொடர்ந்த முனைவர் வாசுகி நகுலராஜா அவர்கள் நிகழ்ச்சி பற்றி தொகுப்புரையை வழங்கினார்.

# "கிராமத்து வதனம்" தமிழ்ப் பெண்கள் பண்பாட்டு மையம் அமைப்பு நடத்திய "உலக மகளிர் தினக் கொண்டாட்டம்"



26 பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் அடங்கிய "ஆறாம் நிலத்திணைச் சிறுகதைகள்" என்னும் தொகுப்பும் வெளியிடப்பெற்றமை பெண்களை பெருமைப்படுத்தும் நிகழ்வாக விளங்கியது.

கனடாவில் மிக நீண்ட காலமாக இயங்கிவரும்பெண்கள் சார்ந்த அமைப்பான "கிராமத்து வதனம்" தமிழ்ப் பெண்கள் பண்பாட்டு மையம் அமைப்பு நடத்திய உலக மகளிர் தினக் கொண்டாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று 6ம் திகதியன்று ஈற்றொபிக்கோ நகரில் அமைந்துள்ள Thistletown Community Centre மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அன்றையதினம் 26 பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் அடங்கிய "ஆறாம் நிலத்திணைச் சிறுகதைகள்" என்னும் தொகுப்பும் வெளியிடப்பெற்றமை பெண்களை பெருமைப்படுத்தும் நிகழ்வாக விளங்கியது. அத்துடன் அன்றைய தினம் வதனன் காலாண்டு சஞ்சிகையின் ஜனவரி - மார்ச் மாதங்களுக்கான இதழ் வெளியிடப்பெற்றது.

மேற்படி விழாவில் கலை நிகழ்ச்சிகள் மற்றும் உரைகள் ஆகியனவும் இடம்பெற்றன.

இந்த மகளிர் தினக் கொண்டாட்டத்தை "கிராமத்து வதனம்" தமிழ்ப் பெண்கள் பண்பாட்டு மையம் அமைப்பின் தலைவி கமலவதனா சுந்தர் அவர்கள் தனது குழுவினருடன் இணைந்து சிறப்பாக நடத்தியிருந்தார்.

பேராசிரியர் இ. பாலசுந்தரம். முனைவர் வாசுகி நகுலராஜா. முனைவர் பார்வதி கந்தசாமி. கவிஞர் அகணி சுரேஸ்.எழுத்தாளர் அகணி சுரேஸ் உட்பட பல கலை இலக்கியவாதிகள் கலந்து சிறப்பித்தனர்.

ஒன்றாரியோ மாகாண அரசின் பாராளுமன்ற உறுப்பினரும் இணையமைச்சருமான விஜேய் தணிகாசலம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கலைஞர்களை பாராட்டிக் கௌரவித்தார்.

நீண்ட ஒரு கலைவிழாவாகவும் பெண்களை கொண்டாடும் நிகழ்வாகவும் விளங்கிய அன்றை மாலைப்பொழுது மறக்கமுடியாத ஒன்றாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.







இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கையில் தேங்காய் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சிக்கு காரணமான வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதில் அரசு அசமந்தம் — பொ. ஐங்கரநேசன் குற்றச்சாட்டு!



இலங்கையில் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் தேங்காய் உற்பத்தி 32.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. எதிர்வரும் மாதங்களில் மேலும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேங்காய் உற்பத்தியில் பெரும் சரிவை ஏற்படுத்தி வரும் பிரதான காரணிகளில் தென்னை மரங்களில் பரவி வருகின்ற வெள்ளை ஈக்களின் தாக்கமும் ஒன்றாக உள்ளது. ஆனால், வெள்ளை ஈக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இதுவரையில் அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுக்காமல் அசமந்தமாக உள்ளது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்னை மரங்களில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வெள்ளை ஈக்களின் தாக்கம் தேங்காய் உற்பத்தியைப் பாதித்து வருவது தொடர்பாக 1. உற்பத்தியை அறதித்து வருவது பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் தமிழ் - சிங்கள மக்களின் உணவிலும் பண்பாட்டிலும் பிரதான இடத்தைப் பிடித்திருக்கின்ற தேங்காய்கள் ஏற்றுமதியின் மூலம் நாட்டுக்குக் கணிசமான அந்நிய செலாவணியையும் ஈட்டித்தருகின்றன.

உற்பத்தியாகும் தேங்காய்கள் மூன்றில் இரண்டு பங்கு உள்ளூரில் நுகரப்பட, மூன்றில் ஒருபாகம் உலர்ந்த தேங்காய்த் துருவல்களாகவும், தேங்காய் எண்ணையாகவும் மதிப்புக்கூட்டி ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவற்றுக்கென ஆண்டுக்கு 4 பில்லியன் தேங்காய்கள் தேவைப்படும் நிலையில் தற்போது 3 பில்லியன் தேங்காய்கள் வரையிலேயே அறுவடை செய்யப்படுவதாகத் தெங்கு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தென்னையுடன் தொடர்புபட்ட இன்னுமொரு அமைப்பான தென்னை ஆராய்ச்சி நிறுவனம் அடுத்த 2026ஆம் ஆண்டில் சுமார் நூறு மில்லியன் தேங்காய்களுக்குப் பற்றாக்குறைவு ஏற்படும் என்று தெரிவித்திருக்கிறது.

பற்றாக்குறைகளை ஈடுசெய்வதற்காகத் தேங்காய்ப்பால் உலர்ந்த தேங்காய்த் தூள், குளிர்ந்த தேங்காய்க்கூழ் ஆகியவனவற்றை இறக்குமதி செய்ய அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறது.

இதனால் அதிகம் பாதிக்கப்படப்போவது பொருளாதாரரீதியாகப் பிந்தங்கியுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற ஏழை எளிய மக்கள் தம் வீட்டு வளவுகளில் உள்ள தென்னைமரங்களை உணவாதாரமாகவும் வாழ்வாதாரமாகவும் பயன்படுத்திவந்த மக்கள் இன்று அம்மரங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளை ஈக்களின் தாக்கத்தால் தேங்காயைச் சொட்டாகப் பயன்படுத்தும் நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

பெருமெடுப்பில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை முன்னெடுத்து வரும் அரசாங்கம் குப்பை கூழங்களையும் சுவரொட்டிகளையும் அகற்றுவதோடு நிற்காமல் வெள்ளை ஈக்களை அகற்றித் தென்னையைச் சுத்தம் செய்வதையும் வதையும் அத்திட்டத்தில் உள்வாங்கவேண்டும். விரைந்து செயற்படாவிடின் வீட்டினதும் நாட்டினதும் தெங்குப் பொருளாதாரம் மென்மேலும் வீழ்ச்சியடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊர்காவற்துறை மக்களின் நீண்டநாள் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுத்த ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்!



நீண்டநாள் கனவாக இருந்துவந்த குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுத்த ஈழ மக்கள் ஜனநாய கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்கு மக்கள் தமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்கு ஜே/52 கிராம சேவகர் பிரிவில் வாழும் மக்கள் தமது அடிப்படை தேவையான குடிநீர் இன்றி நீண்டகாலமாக பெரும் அசௌகரியங்களை சந்தித்துவந்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த பகுதி மக்கள் கடந்த வருடம் கட்சியின் பிரதேச நிர்வாகத்தினர் ஊடாக குறித்த விடயத்தை முன்னாள் கடற்றொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்தக்கு கொண்டுசென்றிருந்தனர்.

மக்களின் அவசிய தேவைகருதி குடிநீருக்கான தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு துறைசார் அதிகாரிகள் ஊடாக நடவடிக்கை முன்னெடுத்திருந்தார். அதனடிப்படையில் குழாய் வழி மூலமான குடிநீர் குறித்த பகுதிக்கு வழங்கப்பட்டு மக்களின் தேவை பூர்த்தி செய்யப்பட்டது.

இந்நிலையில் 5ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் குறித்த பகுதிக்கு சென்றிருந்த செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதி மக்களின் நலன்கள் கறித்து கலந்துரையாடியதுடன் குறித்த குடிநீர் வழங்கலையும் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.
Kindly redeem the following pawn ticket number immediately
Cr362,358,364,190,208,307,337,5705,290,391,406,210,338,346,324,202,217,195,231,211,154,339,513,
372,148,413,465,553,293,188,270,288,295,305,251,329,335,363,384,393,410,42,385,386,431

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



தொடர்புகளுக்கு :
Tel : 416-291-CASH (2274)
Fax : 416-291-2276
E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca

4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8

# மோடியின் வருகையும் தமிழ் மக்களும்.

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



இந்தியப் பிரதமர் இலங்கைக்கு நான்காவது தடவையாக வந்திருக்கிறார். ஆனால் நான்கு தடவைகளும் அவர் நான்கு வேறு இலங்கை ஜனாதிபதிகளைச் சந்தித்திருக்கிறார். ஆனால் இந்த நான்கு விஜயங்களின்போதும் மாறாத முக்கியமான விடயம் என்னவென்றால், தமிழர்கள் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடுதான். இந்தியா தொடர்ந்தும் இந்திய இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையிலான 13ஆவது திருத்தத்தை வலியுறுத்துவதாகத் தெரிகிறது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும், அல்லது யாப்பில் இருப்பதை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்று இந்தியா தொடர்ச்சியாகக் கூறி வருகின்றது. இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயங்களில் மாறாத விசயம் அது.

மேலும் இந்தியப் பிரதமரின் வருகைகளின் விளைவாக மாறாத மற்றொரு விடயமும் உண்டு. அதுதான் மீனவர்களின் பிரச்சினை.அதுவும் தமிழ் மக்களோடு சம்பந்தப்பட்ட பிரச்சனைதான்.

இப்படிப் பார்த்தால் 2009க்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளிலும் இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடுகளில் குறிப்பிட்டுச் செல்லக் கூடிய மாற்றங்கள் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன் இந்தியப் பிரதமர் "கூட்டுறவுச் சமஸ்டி" என்ற வார்த்தையை இந்திய நாடாளுமன்றத்தில் பிரயோகித்தார். அவருடைய அரசாங்கத்தின் பிரதானிகளில் ஒருவராகிய அமைச்சர் அமித் ஷா இலங்கைத்தீவில் நடந்தது இன அழிப்பு என்று ராமேஸ்வரத்தில் வைத்துச் சொன்னார். மேலும், ஐநாவில் மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பின்போது கடந்த முறை இந்தியா வாக்கெடுப்பைத் தவிர்த்தது. இவை தவிர 13வது திருத்தத்தை வலியுறுத்தும் விடையத்திலும் இலங்கை தீவில் தமிழர்களையும் சிங்களவர்களையும் இந்தியா சமதூரத்தில் வைத்துக் கையாள்கிறது என்ற தோற்றத்தை வெளிக்காட்டும் விடயத்திலும் கடந்த 15 ஆண்டுகளாக இந்திய அணுகுமுறைகளில் மாற்றம் இல்லை.

அப்படித்தான் தமிழ்த் தரப்பிலும் தமிழரசுக் கட்சி சம்பந்தர் சொன்னதைத்தான் திரும்பத் திரும்பக் கூறுகிறது. மற்றது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. இங்கு தமிழரசுக் கட்சியை விடவும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டைச் சற்று ஆழமாகப் பார்க்க வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக முன்னணியின் 13க்கு எதிரான கோஷம் அல்லது 13க்கு எதிரான அரசியல் என்பது உணர்ச்சிகரமான வெகுசன அரசியல் பரப்பில் அவர்களை இந்தியாவிற்கு எதிரானவர்களாகத்தான் அடையாளப்படுத்தி வந்திருக்கின்றது. எனினும் இலங்கை இந்திய உடன்படிக்கை தொடர்பில் அக்கட்சி இந்தியாவின் பிராந்திய நலன்களை தமிழ் நோக்கு நிலையில் இருந்து பாதுகாப்பது என்ற விடயத்தில் தொடர்ச்சியாக ஒரே நிலைப்பாட்டோடுதான் காணப்படுகின்றது.

இந்திய இலங்கை உடன்படிக்கை தொடர்பில் அதாவது இப்பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பான நிலைப்பாடுகள் தொடர்பில் முன்னணி சரியான நிலைப்பாட்டையே தொடர்ந்தும் எடுத்து வந்திருக்கிறது.

கடந்த வாரம் இந்திய பிரதமரின் வருகைக்கு பின் கஜேந்திரகுமார் வழங்கிய பேட்டிகளிலும் அதை அவர் மீள உறுதிப்படுத்தியிருக்கிறார்... "இலங்கைத் தீவில் இந்தியாவுக்கு மட்டும்தான் அதன் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஒரு பார்வை - பங்களிப்பு - உரித்து - இருக்க முடியும் என்பதை நாங்கள் ஏற்று அங்கீகரிக்கின்றோம்... வேறு எந்த நாட்டுக்கும் தங்களுடைய தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் இலங்கையை அணுகும் உரிமையோ, அருகதையோ இல்லை என்பதே எங்கள் நிலைப்பாடு என்பதை வெளிப்படுத்தினோம்....இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு என்ற அம்சத்தில் இலங்கைத் தீவு இந்தியாவுக்கு மற்றைய நாடுகளை விட முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டைக் குறிப்பிட்டோம்....விசேடமாக வடக்கு, கிழக்கில் அந்த உரிமை இந்தியாவுக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் அங்கீகரிக்கின்றோம் என்பதை இந்தச் சந்திப்பில் சொன்னோம்...." இது அக்கட்சியைச் சேர்ந்தவர்களால் பகிரப்படும் ஆவணத்தில் காணப்படுவது.

அதாவது இந்தியாவின் பாதுகாப்பு நோக்குக் கோணத்தில் இருந்து இந்திய இலங்கை உடன்படிக்கையை முன்னணி ஏற்றுக்கொள்கிறது. ஆனால் அதேசமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆவது திருத்தத்தை முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை.

கடந்த 15 ஆண்டுகளாக இந்தியா 13ஐ வலியுறுத்தி வருகிறது. 13 ஏற்கனவே இலங்கையின் யாப்பில் இருப்பது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையின் கீழ் 13 ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது. கடந்த 38 ஆண்டுகளாக அது முழுமையாக அமல்படுத்தப்படவில்லை. இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், இலங்கைத்தீவின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிகள் தமது நிறைவேற்று அதிகாரங்களை 13ஐ அமல்படுத்தாமல் விடுவதற்குத்தான் பயன்படுத்துகிறார்கள். அதாவது யாப்புக்கு எதிராகவே நிறைவேற்று அதிகாரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டதோர் அபகீர்த்தி மிக்க யாப்புப் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் ஒரு நாடு 38 ஆண்டுகளின் பின்னரும் யாப்பை முழுமையாக அமல்படுத்தும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றதா?

13ஆவது திருத்தம் இந்தியாவின் குழந்தையும்தான். எனவே அதனை முழுமையாக அமல்படுத்துமாறு குறிப்பாக கடந்த 15 ஆண்டுகளாக கொழும்பின் மீது ஏன் இந்தியாவால் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியவில்லை? அப்படிப் பார்த்தால் 13 ஆவது திருத்தம் என்பது இலங்கைத்தீவில் இந்தியாவின் இயலாமையைக் குறிக்கும் ஒரு யாப்பு ஏற்பாடு என்றும் சொல்லலாம். கடந்த 15 ஆண்டுகளாக தன்னால் முடியாமல் போன ஒரு விடயத்தை இந்தியா தொடர்ந்து ஏன் வலியுறுத்தி வருகின்றது? தமிழர்களுக்காக கொழும்பைப் பகைப்பதற்கு இந்தியா தயாரில்லாமல் இருப்பதன் ஒரு குறிகாட்டியாக இதை எடுத்துக் கொள்ளலாமா?

இப்பொழுது நாட்டை ஆள்வது சீன சார்பு இடதுசாரி பாரம்பரியத்தில் வந்ததும் இந்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருந்ததுமாகிய ஜேவிபியை அடித்தளமாகக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆகும். ஜேவிபியின் இரண்டாவது ஆயுதப் போராட்டம் எனப்படுவது முழுக்க முழுக்க இந்தியாவுக்கு அதாவது இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு எதிரானதுதான். 38 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்கு எதிராக ஒரு போராட்டத்தை முன்னெடுத்த அமைப்பின் தலைவர் கடந்த வாரம் இந்திய பிரதமரின் முன் பணிவாக ஒரு மாணவனைப்போல நின்றார்.

பிரதமர் மோடியும் அனுரவும் ஒன்றாக நிற்கும் ஒளிப்படங்களிலும் சரி காணொளிகளிலும் சரி அனுர ஒரு பணிவான தம்பியைப்போலதான் காணப்படுகிறார். அது நடிப்பா அல்லது இயல்பா என்பதை வரலாறு சொல்லும். ஆனால் 38 ஆண்டுகளுக்கு முன்பு கடுமையான இந்திய எதிர்ப்பை வெளிப்படுத்திய ஒரு கட்சி இப்பொழுது ஆளுங்கட்சியாக வந்தபின் தலைகீழாக நிற்கின்றது.

இதுதான் அரசியல். அரசியலில் நிரந்தர நண்பர்களும் கிடையாது எதிரிகளும் கிடையாது. சிங்கள மக்கள் ஓர் அரசுடைய தரப்பு. அந்தத் தரப்பு வெளிஅரசுகளுடன் அதன் அணுகுமுறைகளில் வீரம் காட்டவில்லை. விவேகம் தான் காட்டுகின்றது.

அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்களும் அவ்வாறான விவேகமான அணுகுமுறைகளுக்குப் போக வேண்டும். அதாவது ஓர் அரசுபோல சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். இதன் பொருள் 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்ல. இன அழிப்புக்கு எதிரான நீதியைப் பெறுவதற்கான போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்பதும் அல்ல. அரசுகளின் அரங்கில் ஓர் அரசைப் போல சிந்தித்து காய்களை நகர்த்த வேண்டும் என்பதுதான்.

நாங்கள் நீதியாக இருக்கிறோம்; எங்கள் பக்கம் நீதி இருக்கிறது; என்பதற்காக உலகம் எங்களிடம் நீதியாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது. ஓர் ஆபிரிக்கப் பழமொழி உண்டு "நீ சிங்கத்தைச் சாப்பிட மாட்டாய் என்பதற்காக சிங்கம் உன்னைச் சாப்பிடாமல் விடாது" என்று. அதுதான் அரசியல். சிங்கங்கள் இரை தேடும் உலகில்தான் தமிழ் மக்கள் நீதிக்காகப் போராட வேண்டியிருக்கிறது.

---

# மறுமுறை வந்திடுவாய்
## (கட்டளைக் கலித்துறை)

*சித்திரை வந்திடவே தோன்றிடும் இன்பமும் தன்னாலே!*
*புத்தரைப் பூசிக்கும் பௌத்தர்க்கும் புண்ணியப் பண்டிகையே!*
*புத்துடை பூண்டு புதுப்பொலிவும் பூரிப்பும் பெற்றோமே!*
*மத்தகம் வாங்கியே மாதாக்கள் இன்பமுற வைத்தோமே!*

*மருத்துநீர் மொண்டே மகிழ்வுடன் மஞ்சன மாடியுமே!*
*மருதடி மூலவர் முன்னால் மனதினால் மன்றாடி*
*கருத்துடன் கண்ணியம் காருணியம் காதலும் கைக்கொண்டே!*
*பருப்புடன் பாகுபோல் பண்பாய்ப் பயணிப்போம் பாரினிலே!*

*முற்றம் பெருக்கியே! முத்துமுத்தாய்க் கோலமு மிட்டோமே!*
*பற்றுடன் பால்விட்டுப் பொங்கலைப் பக்தியாய்ப் பொங்கினோமே!*
*சுற்றமும் சூழ்ந்திடவே சொந்தங்கள் சேர்ந்தே சுவைத்தோமே!*
*பெற்றோர் பெரியவர் பண்பொடு சேர்ந்தே பழகினரே!*

*வாட்டிடும் வெய்யோனும் வந்துமே எம்மை வருத்தினாலும்*
*போட்டிகள் வைத்து பெரிதாகப் பேரமும் பேசினோமே*
*நாட்டியம் ஆடியும் நற்கவி பாடியும் நண்ணினோமே*
*பாட்டிகள் மெச்சிடப் பட்டளித்துப் பாராட்டுப் பெற்றோமே!*

*வறுமை வறண்டிட விக்கினம் நீங்கிட வாழ்த்தியுமே*
*சிறுமை சிதைந்துமே தாரணி சீர்பெற்றுத் தங்கிடவே!*
*கறுப்புகள் நீக்கியே கச்சிதம் கம்பீரமும் காத்துமே!*
*மறுமுறை வந்திடு மக்கள் மனது மலர்ந்திடவே!*

01.மத்தகம்...தலையணி    02. மொண்டு... – எடுத்து
03. மஞ்சனமாடி...நீராடி    04. நண்ணினோம்...சேர்ந்தோம்
05. விக்கினம்...துன்பம்    06. தாரணி... – பூமி
07. கறுப்புகள்...குற்றங்கள்.

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# உள்ளூர் அதிகார சபை தேர்தல் — தமிழர் தாயகப் பரப்பில் இருக்கின்ற தமிழ் கட்சிகளின் கைகளுக்கு மக்கள் அதிகாரத்தை வழங்க வேண்டும் — சமூக செயற்பாட்டாளர் கருணாகரன் நாவலன் வலியுறுத்து!

பு. கஜிந்தன்

**பலாலி விமான நிலையத்தை அடுத்த மூன்று மாங்களுக்குள் அபிவிருத்தி செய்யப்போவதாக கூறுகின்றார்கள். இந்த விமான நிலையம் ஏற்கனவே இந்திய அரசின் அனுசரணையுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு சர்வதேச விமான நிலையமாக வியாபித்திருக்கின்றது.**




நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபை தேர்தலில் வடக்கின் உள்ளூராட்சி மன்றங்களை தமிழர் தாயகப் பரப்பில் இருக்கின்ற தமிழ் கட்சிகளின் கைகளுக்கு மக்கள் அதிகாரத்தை வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள சமூக செயற்பாட்டாளரான கருணாகரன் நாவலன், தேசிய மக்கள் சக்தி என்ற போர்வைக்குள் இருக்கின்ற இனவாத ஜே.வி.பியின் கைகளுக்கு சென்றால் அது தமிழ் மக்களின் இருப்புக்கே ஆபத்து என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் மக்களது வாக்குகள் தத்தமது பிரதேசங்களை உள்ளடக்கிய தமிழ் தேசிய கட்சிகளை நோக்கியதாகவே இருப்பது அவசியமானது. இதை மக்கள் உணர்ந்துகொள்வதும் அவசியமாகும்.

ஏனெனில் தமிழ் மக்களின் இருப்பையும் உரிமைகளையும் பறித்து ஜே.வி.பி என்ற வன்முறைக் குழு இன்று தேசிய மக்கள் சக்தி என்ற போர்வையில் தம்மை உருமாற்றிக்கொண்டு தமிழ் மக்களை ஏமாற்ற முற்படுகின்றது.

இந்த வேடதாரிகளின் பொறிக்குள் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் வீழ்த்தப்பட்டதனால் இன்று தமிழரது உரிமைகள் விடயமாகவோ, அரசியல் கைதிகள் விடயமாகவோ அன்றி அபிவிருத்திகள் தொடர்பிலோ தீர்வுகள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது அந்தரிக்கும் நிலையில் இருக்க நேரிட்டுள்ளது.

இதைவிட கடந்த காலங்களில் மிகச்சிறப்பாக நடைபெற்றுவந்த மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களைக் கூட இந்த தேசிய மக்கள் சக்தி என்ற ஜேவிபியின் ஆளுமையற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் உள்ளடங்கிய குழுவினர் குழப்பி எமது மக்களின் அடிப்படை தேவைகளை கூட தடுக்க முற்படுகின்றனர்.

அனைவருக்கும் சம உரிமை,
சட்டங்களும் அனைத்து மக்களுக்கும் சம்மானவை, ஊழலை இல்லாதொழிப்போம் என்று கோசமிட்டு ஆட்சியை பிடித்தா இந்த வன்முறைக் குழு இன்று தமது உண்மையான முகத்தை காட்டத் தொடங்கியுள்ளது. குறிப்பாக மாவீரர்களை நினைவு கூரமுடியும் என்றவர்கள் ஆட்சியை பிடித்தபின் நினைவுகூர்ந்த மக்களை கைது செய்து பயங்கரவாத சட்டத்தில் தடுத்து சித்திரவதை செய்கினர்.

மத்தியில் தமது அதிகாரமே இருக்கின்றது என கூறி பிரதேசங்களின் அதிகாரங்களை சூறையாட தற்போது மக்களாகிய உங்களிடம் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் வரக் கூடும். சில சலுகைகளை தரலாம் என்றும் கூற முற்படுவார்கள். அந்த பசப்பு வார்த்தைகளை நம்பி மக்களாகிய நீங்கள் இனியொரு தடவை ஏமாந்துவிடாதீர்கள்.

உள்ளூராட்சி அதிகாரங்கள் அந்த இனவாத தேசிய மக்கள் சக்தி என்ற ஜே.வி.பி.யினரிடம் சென்றால் இருக்கின்ற காணி நிலங்கள் கூட எமக்கு இல்லாது போகும் நிலை உருவாகும்.

குறிப்பாக பலாலி விமான நிலையத்தை அடுத்த மூன்று மாங்களுக்குள் அபிவிருத்தி செய்யப்போவதாக கூறுகின்றார்கள். இந்த விமான நிலையம் ஏற்கனவே இந்திய அரசின் அனுசரணையுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு சர்வதேச விமான நிலையமாக வியாபித்திருக்கின்றது.

இந்நிலையில் அதை மீளவும் அபிவிருத்தி செய்ய போவதாக கூறுவது காணிகளை சுவீகரிப்பதற்கான முயற்சியாகவே பார்க்க வேண்டியுள்ளது. எனவே இவ்வாறான போக்கு உடையவர்களை எமது மக்கில் பிரதேசங்களில் காலூன்ற விடாது எமது மக்களின் தீர்ப்பு தமிழ் தரப்பின்பால் இருப்பது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# இலங்கையின் ஆட்களை பதிவு செய்யும் சட்டத்திற்கும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல்கள் சட்டத்திற்கும் இடையில் காணப்படும் முரண்பாடுகளும், குறைபாடுகளும்

**- பொ. சிந்துயன்**
**இறுதியாண்டு சட்டத்துறை மாணவன்**
**இங்கிலாந்து**

இலங்கையை பொருத்தவரையில் வாரந்தோறும் சரி மாதந்தோறும் சரி பல்வேறு வகையான சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் உருவாக்கப்படும் சட்டங்கள் அனைத்தும் சட்டத்தில் கூறப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஏனெனில் சட்டங்களை உருவாக்கும் போது அச்சட்டமானது நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்புடையதா? அல்லது அதனுடன் முரண்படக்கூடிய சட்டங்கள் எவை எனவும் அவற்றுக்கிடையிலான முரண்பாட்டைத் தீர்த்து எவ்வாறு சட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்று கூட இலங்கையின் அரசாங்கம் நினைப்பதுமில்லை, வெறுமனே பெயருக்கு ஏற்றால் போலும் தாம் நினைத்தபடியும் சட்டத்தினை உருவாக்குகின்றது இலங்கை அரசு.

இவ்வாறு உருவாக்கப்படும் சட்டங்களால் மக்களும் மக்களுடைய எதிர்காலமும் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. அந்த வகையில் தான் இலங்கையின் ஆட்பதிவு சட்டம் மற்றும் உள்ளூராட்சி தேர்தல் சட்டம் என்பவற்றுக்கிடையிலான முரண்பாடுகள் மக்களின் வாழ்வை எவ்வாறு கேள்விக்குட்படுத்தியுள்ளது என்பதை ஆய்வு செய்கின்றது இந்த கட்டுரை....

தேசிய அடையாள அட்டை என்பது இலங்கையில் பாவிக்கப்படும் அடையாளப்படுத்தலுக்கான ஒரு ஆவணமா-கும். இலங்கை குடியுரிமை பெற்ற 15 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பது கட்டாயமானதொரு விடயமாகும். தேசிய அடையாள அட்டையானது 2016ம் ஆண்டின் 8ம் இலக்க ஆட்களை பதிவு செய்யும் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1968ம் ஆண்டின் 32ம் இலக்க ஆட்களைபதிவு செய்யும் திணைக்களத்தால் (Department For Registration of persons) வழங்கப்படுகிறது.

தற்போது இலங்கையை பொறுத்தவரையில் தேசிய அடையாள அட்டையை எப்போதும் வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு பிரிவினருக்கு சோதனை மற்றும் பிற சந்தர்ப்பங்களில் இது காட்டப்படல் வேண்டும். அதுமட்டுமல்லாது அரச மற்றும் ஏனைய பரீட்சைகளில் தோற்றுவதற்கும், கடவுச்சீட்டுக்கு (Pasport) விண்ணப்பிக்கும் போதும், சாரதி அனுமதிப்பத்திரம் (Driving License) பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கும் தேர்தலில் வாக்களிப்பதற்கும், மற்றும் தேர்தல் ஒன்றில் போட்டியிடுவதற்கான வேட்புமனு சமர்ப்பிக்கும் போதும் தேசிய அடையாள அட்டை இன்றியமையாத ஒன்றாகும்.

இலங்கையை பொறுத்தவரையில் தேசிய அடையாள அட்டையின் பரிணாமமானது பல வளர்ச்சிக் கட்டங்களை கடந்து வந்துள்ளது என்றே கூறமுடியும். பதிவேடுகள் மூலம் இருந்த அடையாள அட்டை முறையானது இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை (e NIC) முறையை அடைந்துள்ளது. பல ஐரேப்பிய நாடுகளில் உள்ளது போன்று இலங்கையின் தேசிய அடையாள அட்டை முறைமை காணப்படுகிறது. உலகளாவிய ஹென்லி கடவுச்சீட்டு தரவரிசையின் (The u;enley Passport Index) படி இலங்கையின் கடவுச்சீட்டானது 91வது இடத்தை பெற்றுள்ளது. அடையாள அட்டையின்றி கடவுச்சீட்டு பெறடுடியாது என்பது நிதர்சனமான உண்மையாகும். எனவே இலங்கைக் கடவுச்சீட்டு பெற்ற நிலை என்பது இலங்கை தேசிய அடையாள அட்டை பெற்ற நிலை என்றே கூற வேண்டும்.

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படை தகுதியாக இலங்கை பிரஜையாக இருக்கும் 15 வயதை எட்டிய அல்லது அடையும் ஒவ்வொரு நபரும் தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பிக்க வேண்டும் என்பதாகும். அடையாள அட்டைக்கான விண்ணபத்தினை பாடசாலை விண்ணப்பதாரர்கள் அதிபர் அல்லது பிரிவெனாதிபதி மூலமும் தோட்டகுடியிருப் பாளர்கள் தோட்ட அதிகாரிகள் மூலமும் அடிப்படை தகுதிகளை பூர்த்தி செய்த ஏனைய விண்ணப்பதாரர்கள் வசிக்கும் பகுதியின் கிராம அலுவலர் மூலம் பிரதேச செயலாளரின் மேலொப்பம் கட்டாயம் இடப்பட்டு விண்ணபத்தினை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் மேலதிக மாவட்ட பதிவாளரால் சான்றளிக்கப்பட்ட பிறப்புச்சான்றிதழ் அல்லது பிறப்பு பதிவேட்டில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட குறிப்பு மற்றும் 06 மாத காலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட ICAO தரமுடைய புகைப்படம் மற்றும் விண்ணபக்கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு என்பனவும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2017ம் ஆண்டின் 16ம் உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல்கள் (திருத்தப்பட்ட) சட்டத்தில் குறிப்பிடப்பட்டபடி அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுதற்கான காரணங்களாக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்குரிய வேட்புமனுவில் கட்சி செயலாளரும், சுயேச்சை குழுவுக்குரிய வேட்புமனுவில் குழுத்தலைவரும் கையொப்பம் இட்டு வேட்புமனுவை சமர்ப்பிக்காதிருத்தலும், சமர்ப்பிக்கப்படுகின்ற வேட்புமனுவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி செயலாளரது அல்லது சுயேச்சை குழு தலைவரது கையொப்பத்தினை சமாதான நீதவான் ஒருவரால் உறுதிப்படுத்தப்படாமல் இருத்தலும், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் வேட்பு மனுவை அக்கட்சிச் செயலாளரால் அல்லது அதிகாரம் பெற்ற முகவராலும், சுயேச்சைக் குழுவொன்றின் வேட்புமனுவை அக்குழுவின் தலைவராலும் கையளிக்காதிருத்தலும்,

வேட்புமனுக்கள் தொடர்பான விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை வேட்பு மனுக்களில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமலிருத்தலலும் வேட்புமனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கைக்கு உரிய மொத்த வைப்புப் பணமும் செலுத்தப்படாதிருத்தலும், வேட்புமனுவில் பெயர் குறிப்பிடப்பட்டு உட்படுத்தப்பட வேண்டிய பெண் அபேட்சகர்களின் எண்ணிக்கை வேட்புமனுவில் பூர்த்தி செய்யப்படாமல் இருத்தலும், (2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் விதிகளுக்கமைய) வேட்பு மனுவில் தமது பெயரை அபேட்சகராக உட்படுத்துவதற்கு சகல அபேட்சகர்களும் தமது விருப்பத்தைத் தெரிவித்து கையொப்பமிட வேண்டியுள்ளதுடன், எவரேனும் ஒரு அபேட்சகர் கையொப்பமிடாதவிடத்து, குறித்த அபேட்சகரின் பெயர் மாத்திரம் நிராகரிக்கப்பட்டு வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் ஒவ்வொரு அபேட்சகரும், அரசியல் யாப்பின் ஏழாம் உப பிரிவிற்கினங்க, தமது உறுதியுரை இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், எவரேனும் ஒரு அபேட்சகர் அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, குறித்த அபேட்சகரின் பெயர் மாத்திரம் நிராகரிக்கப்பட்டு வேட்புமனு ஏற்றுக்கொள்ளப் படும்ஒவ்வொரு இளைஞர் அபேட்சகரும் தனது வயதினை உறுதிப்படுத்தும் பொருட்டு தமது பிறப்புச் அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியை அல்லது பிறந்த திகதியை உறுதிப்படுத்துகின்ற சத்தியக் கடதாசி ஒன்றின் பிரதியை வேட்பு மனுவுடன் இணைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், எவரேனும் ஒரு அபேட்சகர் அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, குறித்த அபேட்சகரின் பெயர் மாத்திரம் நிராகரிக்கப்பட்டு வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படும் என்பனவாகும்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலுக்காக நிராகரிக்கப்பட்ட சில கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணமாக மனுதாரர்களின் பிறப்புச்சான்றிதழ் மேலதிக மாவட்ட பதிவாளரால் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதாகும். 2017ம் ஆண்டின் 16ம் இலக்க உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல்கள் (திருத்தப்பட்ட) சட்டத்தில் எந்தவொரு பகுதியிலும் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தினை மேலதிக மாவட்ட பதிவாளர் உறுதிப்படுத்த வேண்டும் என குறிப்பிடப்படவில்லை, மாறாக பிறப்பு திகதியை அல்லது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதியை உறுதிப்படுத்துகின்ற சத்தியகடதாசி வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடுகின்றது. அவ்வாறு சட்டம் இருக்கையில் மேலதிக மாவட்டப்பதிவாளர் உறுதிப்படுத்தவில்லை என எவ்வாறு தேர்தல் திணைக்களம் வேட்புமனுவினை நிராகரிக்க முடியும்? இலங்கையில் சத்திய கடதாசி வழங்கும் அதிகாரம் சமாதான நீதவானுக்கு (Justice of peace) உள்ளது. அவ்வாறு சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்டு சத்தியகடதாசி வழங்கப்பட்ட வேட்பு மனுக்கள் எவ்வாறு நிராகரிக்கப்பட்டன? இவ்வாறு நிராகரிக்கப்பட்டதால் சமாதான நீதவான் எனும் பதவியே கேள்வியாக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கப்பால் இலங்கையிலுள்ள பிரதேச செயலகங்களிலும் மற்றும் மாவட்ட செயலகங்களிலும் வழங்கப்படும் அனைத்து பிறப்பு அத்தாட்சி பத்திரங்களும் மேலதிகமாவட்டபதிவாளரது கையொப்பமிடப்பட்டு இலட்சினை பொறிக்கப்பட்டே வழங்கப்படுகிறது. இவ்வாறு இருக்கும் நிலையில் தேர்தல் ஆணைக்குழுவில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் அரசாங்கத்தின் ஆணையின்படி நிராகரிக்கப்பட்டது என்றே பல அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைதேர்தலுக்கான வேட்புமனுக்கள் நிராகரிப்பில் சில மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவும் தேசிய அடையாள அட்டைக்கு முக்கியத்துவம் வழங்காமல் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தினையே நிராகரிப்பு மற்றும் ஏற்றுக்கொள்வதற்கான முக்கிய ஆவணமாக கருதினர்.

பிறப்பு அத்தாட்சி பத்திரம் இன்றி இலங்கையில் தேசிய அடையாள அட்டையை பெறமுடியாது என்பது அனைவரும் அறிந்ததொரு விடயமாகும் அவ்வாறு இருக்கையில் மக்களால் குறிப்பாக தமிழ் மக்கள் அதிகம் செறிந்து வாழும் பிரதேசங்களில் வெற்றி பெற்று உள்ளூராட்சி சபையை கைப்பற்றும் என எதிர்பார்க்கப்பட்ட முக்கிய சில தமிழ்கட்சிகளும், சுயேச்சை குழுக்களும் நிராகரிக்கப்பட்டமை அரசாங்கத்தின் நடவடிக்கையே என பல அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கமானது தமிழர் பிரதேங்களில் உள்ள மாநகர, நகர மற்றும் பிரதேசசபைகளை கைப்பற்றுவதற்காக அப்பிரதேசங்களில் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றும் என எதிர்பார்க்கும் கட்சிகள் மற்றும் சுயேட்சைகளை நிராகரித்துவிட்டு மக்களால் வெறுக்கப்படும் கட்சிகளின் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ள தேர்தல் திணைக்களத்தின் பின்னால் நின்று காய்நகர்த்தியாக உள்ளது எனறே கூறமுடியும்.

இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுவரும் இலங்கையில் தனிநபர் ஒருவரின் தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தினை கணினியில் உட்புகுத்தினால் அந்நபர் தொடர்பான குறிப்பாக பிறந்ததிகதி முதல் அவர் வசசிக்குகம் முகவரி வரையான அனைத்து தகவல்களையும் பெறக்கூடியதாக உள்ளநிலையில் பிறப்பு அத்தாட்சி பத்திரம் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதற்காக பலமக்களினதும் பிரதேசங்களினதும் அபிவிருத்திக்கு காரணமாக வேண்டிய கட்சிகள் மற்றும் சுயேட்சைகளை நிராகரித்தமை வேடிக்கையான ஒரு விடயமாகும்.

அவ்வாறெனின் இலங்கையின் அனைத்து பிரஜைகளும் எதிர்வரும் காலத்தில் தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக பிறப்பு அத்தாட்சி பத்திரத்தினை தான் கொண்டு செல்ல வேண்டும் என்ற நிலை உருவாகுமெனும் கேள்வியினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது இலங்கையை விட பொருளாதாரத்திலும் சரி தொழில்நுட்பத்திலும் சரி குறைவாக உள்ள நாடுகள் காகிதத்திலிருந்து இலத்திரனியல் அட்டைக்கு மாறியுள்ள நிலையில் இலங்கையானது இலத்திரனியலில் இருந்து காகிதத்தினை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

இலங்கையின் ஆட்களை பதிவு செய்யும் சட்டம் மற்றும் தேர்தல்கள் சட்டத்தில் உள்ள குறைபாடுகள் எப்போது சரி செய்யப்படும்? இது சரி செய்யப்படாவிட்டால் காலம் தோறும் ஆட்சியமைக்கும் பேரினவாத அரசாங்கங்கள் தமிழ் மக்களினதும் தமிழ் பிரதேசங்களினதும் அபிவிருத்தியினை ஏற்படுத்தாமலே சென்றுவிடும் என்றே கூறமுடியும்.


இனிய
தமிழ் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்
HAPPY TAMIL
NEW YEAR!
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org

VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு
சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION


**25 SENTRA**
*S CVT* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION


**25 KICKS PLAY**
*S* ULTRA-LOW
**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash


*DAA ROTATION


**25 ROGUE**
*S AWD*
**0.99%** | **30** MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com






இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

TAMIL NEW YEAR



Meilleurs voeux de votre
Conseil Municipal

Best wishes from your City Council

VILLE DE CITY OF DOLLARD-DES-ORMEAUX

எமது ஸ்கார்பரோ–அஜின்கோர்ட் தொகுதிக்கான கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்ப்பாளரின்கொள்கை அறிவிப்புகள்

ELECT Aris MOVSESSIAN
Scarborough-Agincourt



- அமெரிக்காவின் நியாயமற்ற வரிகளுக்கு எதிராக போராடுதல் மற்றும் கனேடிய மக்களின் வேலைகளை பாதுகாத்து நமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டுபாட்டில் எடுத்தல்.
- வருமான வரியை 15% குறைத்து, சராசரி தொழிலாளிகளுக்கு ஆண்டுக்கு $900 சேமிக்கவும்; இரண்டு வருமானம் கொண்ட குடும்பங்கள் $1,800 சேமிக்கவும் உதவுதல்.
- மூத்த குடிமக்கள்
  - வரி விலக்குடன் கூ34,000 வரை சம்பாதிக்கவும்,
  - 73 வயது வரை ஓய்வூதிய சேமிப்புத் (சுசுஞ) பங்களிப்பு நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கவும்,
  - ஓய்வூதிய வயதை 65 ஆக உறுதிப்படுத்தவும் உதவுதல்.
- புதிய வீடுகளுக்கான மத்திய விற்பனை வரியை $1.3 மில்லியன் வரை குறைத்து, வீடு வாங்குபவர்களுக்கு $65,000 வரை சேமிக்கவும் உதவுதல்.
- மோசமான குற்றவாளிகள் மீண்டும் ஒருபோதும் சுதந்திரமாக நடக்காமல் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் கனடியர்களின்பாதுகாப்பை கவனித்தல்.

"எதிர்வரும் ஏப்ரல் 28ம் திகதி மாற்றத்திற்காக வாக்களியுங்கள்! Aris Movsessian அவர்களுக்கு வாக்களியுங்கள்!"

www.arismovsessian.ca info@arismovsessian.ca
(416) 477-9933
Unit 5-2950 Birchmount Rd, Scarborough, M1W 3G5

Authorized by the Official Agent of Aris Movsessian.

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca




11/24

On April 28, re-elect
Salma Zahid
Scarborough Centre - Don Valley East

Cut taxes for middle class families
Build 500,000 new homes you can afford
Build fastest growing economy in G7



CANADA STRONG

/SalmaZahid15 /SalmaZahidMP
Authorized by the Official Agent for Salma Zahid


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

## The 3rd Office of 'ReMax Community Realty Inc Brokerage, Owned and Operated by Broker of Record Mr. Rajeeve Koneswaran Was Declared Opened in North York

கனடிய செய்திகள் Canadian News





# ReMax Community Realty Inc Brokerage, வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் 3வது விற்பனை அலுவலகத்தின் திறப்பு விழா வசதிகள் பல நிறைந்த கட்டடத்தில் நடைபெற்றது

“ReMax Community Realty Inc Brokerage" என்னும் வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் 3வது பிரதான விற்பனை அலுவலகத்தின் திறப்பு விழா. கடந்த சனிக்கிழமை, 5ம் திகதி மதியம் 282 Consumers Road, Unit 10, North York என்னும் விலாசத்தில் அமைந்து வசதிகள் பல நிறைந்த கட்டடத்தில் நடைபெற்றது.

மேற்படி ‘‘ReMax Community Realty Inc Brokerage" நிறுவனத்தின் தலைவர் திரு ரஜீவ் கோணேஸ்வரன் திறப்பு விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தார்.

அலுவலகத்தின் திறப்பு விழாவிற்கு மத்திய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

நாடா வெட்டும் வைபவத்தில் அமைச்சரோடு ரஜீவ் கோணேஸ் அவர்களின் தந்தையார் திரு. கோணேஸ்வரனும் இணைந்து அலுவலகத்தைத் திறந்து வைத்தனர்.

மேற்படி சிறப்பான வைபவத்தில் நூற்றுக்கணக்கான ‘‘ReMax Community Realty Inc Brokerage" நிறுவனத்தின் வீடு விற்பனை முகவர்கள். வர்த்தகப் பிரமுகர்கள். மோட்கேஜ் நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் சமூக ஊடகங்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

கனடா உதயன் பத்திரிகை சார்பில் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள் அங்கு கலந்து கொண்டு திரு ரஜீவ் கோணேஸ்வரன் அவர்களை வாழ்த்தினார்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.







**படங்களும் செய்தியும்: சத்தியன்**

கனடிய செய்திகள் Canadian News

## Resonance-2025' a Cultural Event, hosted by Canadian Women Council, Was Graced by Ontario Provincial Ministers

# கனடிய பெண்கள் கவுன்சில் வழங்கிய "Resonance-2025" பல்சுவைக் கலை விழாவில் ஒன்றாரியோ அரசின் அமைச்சர்கள் கலந்து சிறப்பித்தனர்

கடந்த ஏப்ரல் 6ம் திகதி ஸ்காபுறோ தமிழிசைக் கலா மன்ற கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி “Resonance-2025” கலாச்சார விழாவை கனடிய பெண்கள் கவுன்சில் நடத்தியது. இந்த விழாவில் உள்ளூர் கலைஞர்கள் மற்றும் இளைய தலைமுறையினர் தங்கள் கலைத் திறமைகளை மேடையேற்றினர்.

கனடிய பெண்கள் கவுன்சில் அமைப்பின் தலைவி திருமதி. க. ரோகிணி விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தனது அமைப்பின் சக அங்கத்தவர்களோடு இணைந்து சிறப்பாகச் செய்திருந்தார்.

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக ஒன்றாரியோ மாகாண அரசின் முதியோர் நலன் பேணும் அமைச்சர் கௌரவ ரேமண்ட் சோ அவர்கள் மற்றும் ஸ்காபுறோ அஜின் கோர்ட் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஒன்றாரியோ அரசின் குடியுரிமை மற்றும் குடிவரவு அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான அரிஸ் பாபிகியன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள். மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் சார்பில அவரது பிரதிநிதி அங்கு கலந்து கொண்டு வாழ்த்து மடலை வழங்கிச் சென்றார்.

கனடிய பெண்கள் கவுன்சில் அமைப்பின் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகித்த பெரியோர்களுக்கு அங்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பெற்றன.


















ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்
சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்
585 Middlefield Rd, Unit 1 & 2, TORONTO
(MIDDLEFIELD & FINCH) Tel: 416 535-6560
1009 நவோத்ர சகஸ்சிற
சங்காபிஷேக மணவாழக்கோல
27வது ஆண்டு பூர்த்தி பெருவிழா
01-05-2025 வியாழக்கிழமை காலை 9:00 மணிமுதல் விநாயகர் வழிபாடு ஆரம்பமாகி மாலை 5:00 மணிக்கு யாகபூஜை, மகாபூர்ணகுதி, வேததிராவிட பாராயணம், 1009 சங்காபிஷேகம் நடைபெறும். மாலை 8:30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, சுவாமி உள்வீதி திருவிழா நடைபெறும் 9:30 மணி பிரசாதம் வழங்கப்படும்.
அனைவரும் வருக – அன்னையின் அருள் பெருக
என்றும் இறைபணியில் ஆலய தர்ம கர்த்தா

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பிரேமதாச – ரணில் ஆட்சிக் காலத்தில் படலந்த மற்றும் மாத்தளை தவிர்ந்த வேறு சித்திரவதைக் கூடங்களிலும் இருவரின் கொலைக் கரங்கள் "அப்பாவிகளின்" உயிர்களை எடுத்தனவா?



நாடாளுமன்றத்தில் இன்று விவாதிக்கப்படும் நான்கு தசாப்தங்களுக்கு முன்னரான படலந்த சித்திரவதை முகாமைப் போலவே, ஏராளமான அரசு ஆதரவு சித்திரவதை மையங்கள் இலங்கையில் இருந்தன என்பதை உறுதிப்படுத்தும் சில தகவல்களை இலங்கையில் காணாமல் போனார் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் செயலாளர் பல தகவல்களை வெளியிட்டுள்ளார்.

ஜே.வி.பி.யின் இரண்டாவது கிளர்ச்சியின் போது காணாமல் போனவர்களை விசாரிக்க ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் நியமிக்கப்பட்ட மத்திய வலைய ஆணைக்குழுவின் செயலாளர், சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டம் (ITJP), இலங்கையில் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் (JDS) மற்றும் இலங்கை பிரச்சாரம் (SLC) ஆகியவற்றால் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளிகள் மூலம் இந்த தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர், இலங்கையில் 200ற்கும் மேற்பட்ட சித்திரவதைக் கூடங்களைக் காட்டும் முதல் வரைபடத்தை தொகுக்கப்பட்ட ITJP மற்றும் JDS வெளியிட்ட மாத்தளை சித்திரவதைக் கூடங்கள் மற்றும் காணாமல் போன சம்பவங்களில் கோட்டாபய ராஜபக்சவின் பங்கு குறித்து 2022 மற்றும் அதற்குப் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கைகள் குறித்து விசாரணை செய்ய எந்த அரசாங்கமும் ஆர்வம் காட்டவில்லை. http://www.jdslanka.org/images/documents/18_06_2020_itjp_jds_press_release.pdf

தேர்தல் காலத்தில் படலந்த சித்திரவதைக் கூடம் குறித்து நாடாளுமன்ற விவாதத்தை நடத்த தற்போதைய அரசாங்கம் அவசரமாக ஆர்வம் காட்டுவதற்கு, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் அது குறித்து கேள்வி எழுப்பிய பின்னர் அல் ஜசீரா சர்வதேச ஊடக வலையமைப்பு ஏற்படுத்திய தாக்கமே காரணமாக அமைந்துள்ளது.

கடந்த தசாப்தத்தில் மாத்தளை, மன்னார், கொக்குத்தொடுவாய் மற்றும் கொழும்பு துறைமுகம் ஆகிய இடங்களில் பாரிய புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், இந்த விடயத்தில் நாடாளுமன்ற விவாதங்களை நடத்துவதற்கு எந்த அரசாங்கமும் முன்மொழியவில்லை.

1980களின் பிற்பகுதியில் நடந்த மனித உரிமை மீறல் குற்றங்களை விசாரணை செய்ய ஜனாதிபதி சந்திரிக்காவால் நிறுவப்பட்ட காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழுவின் மத்திய வலைய செயலாளர் எம்.சி.எம்.இக்பால் அண்மையில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்த படலந்த வெறும் ஒரு சித்திரவதை கூடம் என்பதை வெளிப்படுத்துகிறார்.

"ஆனால் படலந்த எனப்படுவது பாதுகாப்புப் படையினரால் நடத்தப்பட்ட பல தடுப்பு மையங்களில் ஒன்று அவ்வளவுதான். உதாரணமாக, கண்டியில் உள்ள புனித சில்வெஸ்டர் கல்லூரியிலும் ஒரு சித்திரவதைக் கூடம் இருந்தது."


அந்த இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தனது மற்ற தோழர்களைப் போல மரணத்தைப் பார்ப்பதற்குப் பதிலாக, தற்செயலாக தனது உயிரைக் காப்பாற்றப்பட்டதற்காக "சான்ஸ் காரயா" என்ற புனைப்பெயரைப் பெற்ற ஒரு இளைஞன், காணாமல் போனோர் தொடர்பிலான மத்திய வலைய ஆணைக்குழுவிற்கு வழங்கிய சாட்சியத்திலிருந்து தான் இதைப் பற்றி அறிந்துகொண்டதாக இக்பால் குறிப்பிடுகின்றார்.


இக்பால் சொன்னதை கேட்க - https://x.com/JDSLanka/status/1909262030101422349

இது மீண்டுவர அனுமதிக்கப்படாத பல்லாயிரக்கணக்கானவர்களில் ஒருவரின் கதை மாத்திரமே.

இது பதுளையில் உள்ள ஹாலிஎல மோட்டர்ஸ் சித்திரவதை கூடம் பற்றிய கதை - https://x.com/SLcampaign/status/1909656056642306527?t=KG-1pG4p8rahfzRmlOWdAA&s=09

மத்திய வலைய ஆணைக்குழுவால் ஆவணப்படுத்தப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் முழு பட்டியலையும் இந்த இணைப்பில் அறிந்துகொள்ள முடியும். - http://tinyurl.com/2zyhxeek





SESSIONAL PAPER No. I - 2000

REPORT OF THE COMMISSION OF INQUIRY INTO THE ESTABLISHMENT AND MAINTENANCE OF PLACES OF UNLAWFUL DETENTION AND TORTURE CHAMBERS AT THE BATALANDA HOUSING SCHEME

Printed on the Orders of the Government

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மக்களை நல்வழிப்படுத்த வேண்டிய யாழ்ப்பாணம் மாநகர சபையே வீதியில் குப்பையை கொட்டும் அவலம்!

பு. கஜிந்தன்



யாழ்ப்பாணம் மாநகர சபையானது நடு வீதியில் குப்பைகளை கொட்டுவதால் பயணிகள் பல்வேறு இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கல்லூண்டாய் பகுதியில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் கழிவுகள் சேகரிக்கும் இடம் உள்ளது. ஓட்டுமடத்தில் இருந்து வட்டுக்கோட்டை செல்லும் வீதியூடாகவே அந்த குப்பை சேகரிக்கும் இடத்திற்கு கழிவுப் பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

இவ்வாறு கழிவுப் பொருட்களை கொண்டு செல்லப்படும்போது மாநகர சபையின் வாகனங்கள் உரிய முறைகளை பின்பற்றுவதில்லை. பாதுகாப்பற்ற முறையில் கழிவுகளை திறந்தவாறு கொண்டு செல்வதால் அந்த கழிவுகள் வீதியில் கொட்டப்படுவதுடன், காற்றுடன் அந்த கழிவுப் பொருட்களின் தூசுகள் பறந்து வீதியில் செல்வோரது கண்களுக்குள் செல்வதானால் வாகனத்தை சரியாக செலுத்த முடியாத அபாயகரமான நிலைகளும் ஏற்படுகின்றன.

இது இவ்வாறு இருக்கையில் கடந்த வாரம் காக்கைதீவு சந்தையில் இருந்து வட்டுக்கோட்டை செல்லும் பக்கமாக அண்ணளவாக 200 மீட்டர்கள் தொலைவில் நடு வீதியில் ஏராளமான கழிவுகள் கொட்டப்பட்டு காணப்படுகின்றன. இந்த கழிவுகளானது மாநகர சபையின் கழிவு பொருட்களை ஏற்றும் வாகனத்தில் இருந்து கொட்டப்பட்டு இருக்கலாம் என கருதப்படுகிறது.

இந்த வீதியானது 784, 785 மற்றும் 789 ஆகிய வழித்தட பேருந்துகள் யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் மற்றும் சித்தங்கேணி நோக்கி பயணிக்கும் பிரதான வீதியாக காணப்படுகிறது. இவ்வாறு கழிவுகள் கொட்டப்பட்டு உள்ளமையால் மக்கள் மிகுந்த இன்னல்களை எதிர்கொண்டவாறு பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இது குறித்து மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளரை தொடர்புகொண்டு வினவிய வேளை, குறித்த வீதியில் யாழ். மாநகர சபையினர் கழிவுகளை கொட்டி இருக்கலாம் எனவும், அவர்கள் இன்று நேற்றல்ல தொடர்ச்சியாக இவ்வாறு வீதியில் கழிவுகளை கொட்டி செல்வதாகவும், தாங்கள் இது குறித்து தெரியப்படுத்தியும் அவர்கள் அதனை சீர் செய்வதாக தெரியவில்லை என கூறினார்.

உள்ளூராட்சி சபைகள் என்பன கிராமங்களையும், நகரங்களையும் அபிவிருத்தி செய்வதையும், தூய்மையை பேணுவதையுமே பிரதான நோக்கமாக கொண்டு காணப்படுகிறன. இவ்வாறு இருக்கின்ற நிலையில் மக்களை நல்வழிப்படுத்த வேண்டிய யாழ். மாநகர சபையே இவ்வாறு வீதிகளில் குப்பைகளை கொட்டும்போது இவர்கள் ஏனைய விடயங்களில் எவ்வாறு சரியாக நடந்து கொள்வார்கள் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகின்றது.

## வீணாவின் கவிக்கணை

நன்மையும் சரி
தீமையும் சரி
அவரவர் தரப்பில்
வெவ்வேறு வடிவங்கள்,
ஒருவருக்கு சரி
என்பது
மற்றவருக்கு பிழை
என்றாகிவிடுகிறது,
அடுத்தவருக்கு
நல்லவராக
இருப்பதை விட
நமக்கு நாமே
நியாயமானவராக
வாழ முயற்சிப்பது
சிறப்பு!




# ஜே.வி.பி. – என்.பி.பி.க்கிடையில் பிளவுகளை ஏற்படுத்திய "மோடி"

**"இந்தியாவுக்கு அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு விரும்பியோ விரும்பாமலோ கொடுக்கும் முக்கியத்துவம் வழக்கமாக சீனா ஆதரவுடன் இயங்கும் ஜே.வி.பி.யின் இடதுசாரி அடையாளத்தை மெதுவாக இழக்க வைக்கத் தொடங்கியிருக்கின்றது என்பது ஜே.வி.பி.யில் உள்ள இந்திய எதிர்ப்புணர்வாளர்களை சினமடைய வைத்துள்ள நிலையில்தான் அண்மைய இந்தியப்பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கைக்கான விஜயம் ஜே.வி.பி. - என்.பி.பி க்குள் புகைந்து கொண்டிருந்த முறுகலை, பிளவுகளை தீவிரப்படுத்தி விட்டுள்ளது."**

---------------------------------------------------------- - கே. பாலா ----

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) - தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.) ஆகியவற்றின் தலைவரும் தீவிர இந்திய எதிர்ப்புணர்வாளரும் இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியுமான அநுரகுமார திசாநாயக்க, தான் ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் முதல் நாடாக இந்தியாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயம் இலங்கையில் ஏற்படுத்திய அதிர்வலைகளை விடவும் கடந்த 4 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் ஜே.வி.பி. - என்.பி.பி. அரசு மீது அதிக எதிர்ப்பலைகளையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளதுடன் இந்தியாவுக்கு எதிரான ஜே.வி.பி.யின் கொள்கை தொடர்பிலான கேள்விகளையும் எழுப்பியுள்ளதுடன் ஜே.வி.பி. - என்.பி.பி. கட்சிகளுக்குள் முரண்பாடுகளையும் பிளவுகளையும் தோற்றுவித்துள்ளது.

ஜே.வி.பி. அதன் ஆரம்பத்தில் இருந்தே இந்திய எதிர்ப்புணர்வில் உறுதியாகவிருந்த கட்சி. அதாவது ஜே.வி.பி. இந்தியாவுக்கு எதிரான அதேவேளை இந்தியாவிற்கு எதிரான சீனாவுக்கு ஆதரவான ஒரு அரசியல் கட்சியாகவே செயற்பட்டது. அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் எதிர்த்ததுடன் அதன் அப்போதைய தலைவர் றோஹண விஜேவீர தலைமையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து தென்னிலங்கையில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டது. தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உட்பட ஜே.வி.பி.யின் இன்றைய முன்னணித் தலைவர்களில் பலர் இந்திய எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஜே.வி.பி.யில் இணைந்தவர்கள்.

இலங்கையின் வடக்குக்கு "அமைதி காக்கும் படையை" அனுப்பிவைக்க கைச்சாத்திடப்பட்ட 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் பேரினவாத அடிப்படையில் எதிர்த்த ஜே.வி.பி., இந்தியா, இலங்கையை பிரிக்கத் திட்டமிடுவதாகக் கூறி அதற்கு எதிராக ஆயுத கிளர்ச்சி மற்றும் படுகொலை வன்முறைகளை முன்னெடுத்தது. வேலையற்ற கிராமப்புற இளைஞர்கள் மத்தியில் இந்தியாவுக்கு எதிராக ஒரு பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டது இதன் விளைவாக சுமார் 60,000 பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த 37 வருடங்களுக்கு முன்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கொண்டு வரப்பட்ட காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மீது, இராணுவ அணிவகுப்பு மரியாதையில் விஜயமுனி என்ற கடற்படை அதிகாரி தாக்க முற்பட்ட சம்பவம் பதிவாகி இருந்தது. இந்தநிலையில் குறித்த நபர் ஜே.வி.பி. பின்னணியை சேர்ந்தவர் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. அக் காலப்பகுதியிலேயே குறிப்பாக ஜே.வி.பி.யினுடைய ஊடுருவல் இலங்கையின் முப்படைகளிலும் ஆழமாக இருந்த நிலையிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றிருந்தது. இத்தாக்குதலில் கற்றுக்கொண்ட பாடத்தின் அடிப்படையிலேயே அண்மையில் இலங்கை வந்த இந்தியப்பிரதமர் நரேந்திரமோடிக்கான இராணுவ அணி வகுப்பு மரியாதையில் மோடியின் பாதுகாப்பு பிரிவினர் முன்னெச்சரிக்கையாக அணிவகுப்பு மரியாதையை ஏற்ற மோடிக்கு பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

இவ்வாறு ஜே.வி.பி.யின் படுகொலைகள், வன்முறைகள் உச்சம் தொட்ட நிலையில் ஜனாதிபதியாக பிரேமதாச பதவியேற்றபின்னர் இரும்புக்கரம் கொண்டு ஜே.வி.பி. அடக்கப்பட்டது, அழிக்கப்பட்டது. இதன்பின்னர் ஜே.வி.பி. தலைமைத்துவம் 1994இல் மீண்டும் ஒன்றுகூடி, ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினரின் ஆதரவுடன், அதன் சோசலிச வாய்ச்சவடால்களை பெருமளவில் கைவிட்டுவிட்டு, தமிழ் மக்களுக்கு எதிரான கொடூரமான இனவாத யுத்தத்தை ஆதரித்ததுடன், தம்மை ஒரு பாராளுமன்றக் கட்சியாக மாற்றிக்கொண்டது. இவ்வாறான நிலையில்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான வடக்கு, கிழக்கு இணைப்பை நீதிமன்றத்தினூடாக பிரித்ததுடன் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு செய்து தமிழ் மக்களுக்கு எதிரான இறுதி அழித்தொழிப்பு யுத்தத்தை ஆரம்பிக்கவும் முன்நின்றது.

போருக்கான அதன் ஆதரவு மற்றும் பல்வேறு முதலாளித்துவ அரசாங்கங்களில் அதன் பங்கேற்பு அல்லது அரசியல் ஆதரவளிப்பினால் மதிப்பிழந்து போன ஜே.வி.பி. 2015 இல் தேசிய மக்கள் சக்தி என்ற கட்சியை ஸ்தாபித்தது. ஜே.வி.பி.யின் கடந்த கால ஆயுத வன்முறை, படுகொலை அடையாளத்தில் இருந்து விலகிக் கொள்ளும் நோக்கிலேயே, அநுரகுமாரவும் அவருக்கு ஆலோசனைகளை வழங்கும் புலமையாளர்களும் தேசிய மக்கள் சக்தி என்ற புதிய முகமூடியைப் போட்டுக் கொண்டார்கள். சிவில் சமூக அமைப்புக்கள் சிலவற்றையும், கல்வியாளர்களையும் புதிதாக இணைத்துக் கொண்டு தேசிய மக்கள் சக்தியாக உருமாறி கடந்த ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் எதிர்கொண்டு வெற்றிபெற்று இன்று ஆட்சியாளர்களாகியுள்ளனர்.

ஆட்சிபீடம் ஏறுவதற்கு முன்னர் இருந்த ஜே.வி.பி. - என்.பி.பி. ஆகியவற்றின் கொள்கைகளும் பிரசாரங்களும் கொடுத்த வாக்குறுதிகளும் ஆட்சி பீடமேறிய பின்னர் ஒட்டுமொத்தமாக தலைகீழானதே இன்று இவர்கள் கடுமையாக விமர்சிக்கப்படுவதற்கும் இவர்களின் ஆதரவாளர்கள் விசனப்படுவதற்கும் காரணமாகியுள்ளது. அதிலும் இந்தியாவின் எதிர்ப்புணர்வாளர்களாகவே தம்மை இறுதிவரை காட்டி வந்த இவர்கள் இன்று இந்தியாமீது கொண்டுள்ள தீவிரமான காதல் இவர்களின் கொள்கை. இரட்டைவேடம் தொடர்பிலான பல்வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளது. அத்துடன் ஜே.வி.பி.யில் இன்றுமுள்ள சில தீவிர இந்திய எதிர்ப்புணர்வாளர்களினால் ஜே.வி.பி. - என்.பி.பி. கட்சிகளிடையில் பிளவுகளும் முறுகல்களும் ஏற்பட்டுள்ளதை அண்மைய இந்தியப்பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கைக்கான விஜயம் வெளிப்படுத்தியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) - தேசிய மக்கள் சக்தி (என்.பி.பி.) ஆகியவற்றின் தலைவரான ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தான் ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் தனது முதல் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியாவுக்கு சென்றமை ஜே.வி.பி. - என்.பி.பி.க்கிடையில் புகைச்சலை ஏற்படுத்தியது. ஜே.வி.பி.யில் தற்போதுமுள்ள இந்திய எதிர்ப்புணர்வாளர்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது முதல் விஜயமாக சீனாவுக்கு செல்ல வேண்டுமென விரும்பியபோதும் வலியுறுத்தியபோதும் அயல்நாடு என்றவகையில் இந்தியாவுக்கு முதலில் செல்ல அநுரகுமாரவுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட்டதுடன் அதற்கான அழுத்தமும் இந்தியாவினால் கொடுக்கப்பட்டது. இதனால்தான் இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களை "இந்திய விரிவாக்கத்தின் ஐந்தாம் படையின் கருவி" என்று முன்னர் கூறிவந்த ஜே.வி.பி.யின் தலைவர் அதே இந்தியாவுக்கு முதல் மரியாதை செலுத்த வேண்டியேற்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்த இந்திய விஜயம் தொடர்பில் ஜே.வி.பி.க்குள் எதிர்ப்பலைகள் எழுந்ததுடன் நாட்டிலும் அநுரகுமார அரசுக்கு எதிரான விமர்சனங்கள், விசனங்கள் கிண்டல்கள் வெளிவரத் தொடங்கிய நிலையில் அநுர குமார திசாநாயக்கவின் இந்திய விஜயத்தையும் அவரது உயர்மட்ட கலந்துரையாடல்களையும் அவரது கட்சிக்கு கிடைத்துள்ள சர்வதேச அங்கீகாரமாக தேசிய மக்கள் சக்தி வெளிக்காட்டி பிரசாரங்களை முன்னெடுத்தது. புதுடில்லிக்கான அவரின் மூன்று நாள் விஜயத்தின் சந்திப்புக்கள், பேச்சுக்கள். ஒப்பந்தங்கள் தேசிய மக்கள் சக்தி, அதன்ஆதரவு ஊடகங்கள், தரப்புக்களினால் நியாயப்படுத்தப்பட்டன, பாராட்டப்பட்டன. ஆனால் மறுபுறம் இந்தியா தொடர்பிலான ஜே.வி.பி.யின் கடந்தகால கடும் போக்கும் தற்போதைய மென்போக்கும் கடுமையான விமர்சனங்களுக்குள்ளாகின.

இவ்வாறு இந்தியாவுக்கு அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு விரும்பியோ விரும்பாமலோ கொடுக்கும் முக்கியத்துவம் வழக்கமாக சீனா ஆதரவுடன் இயங்கும் ஜே.வி.பி.யின் இடதுசாரி அடையாளத்தை மெதுவாக இழக்க வைக்கத் தொடங்கியிருக்கின்றது என்பது ஜே.வி.பி.யில் உள்ள இந்திய எதிர்ப்புணர்வாளர்களை சினமடைய வைத்துள்ள நிலையில்தான் அண்மைய இந்தியப்பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கைக்கான விஜயம் ஜே.வி.பி.க்குள் புகைந்து கொண்டிருந்த முறுகலை, பிளவுகளை தீவிரப்படுத்தி விட்டுள்ளது. இதன் வெளிப்பாடுகளாகவே இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியை விமான நிலையத்தில் வரவேற்கும் நிகழ்வு, இராப்போசன விருந்துபசாரம் போன்றவற்றை ஜே.வி.பி.யை பிரதிநிதித்துவப்படுத்தும் சில முக்கிய அமைச்சர்கள் புறக்கணித்துள்ளனர்.

அண்மையில் கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, அதானியின் கொழும்புமேற்கு துறைமுக அபிவிருத்தி, திருகோணமலை துறைமுக மேம்பாடு குறித்தும் அதன் அறிவிப்பை இந்திய பிரதமர் வரும்போது வெளியிடலாமென்றும் இந்த கூட்டத்தில் பேசப்பட்டபோது அவற்றையெல்லாம் நிராகரித்து, அப்படிச் செய்யமுடியாதென கூறி அந்த கூட்டத்தில் இருந்தே வெளியேறியிருந்தார் ஜே.வி.பி அமைச்சர் ஒருவர். இன்று நாடொன்றின் பிரதமரையே கூடி நின்று வரவேற்கமுடியாத நிலைமை ஜே.வி.பி. - என்.பி.பி. அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

மோடியின் இந்த விஜயத்தின்போது இலங்கை மற்றும் இந்தியா இடையே பல பாதுகாப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன .இலங்கைக்கு புலனாய்வுத் தகவல் வழங்குவது, திருகோணமலையில் சக்த்திவாய்ந்த ராடர் ஒன்றை நிறுவுவது, இலங்கை கடல் படைக்கு பயிற்சி, விமானப் படைக்கு பயிற்சி மற்றும் விமானங்களை வழங்குவது என்று 15க்கும் மேற்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தங்கள் இந்தியா மற்றும் இலங்கை இடையில் கைச்சத்திடப்பட்டுள்ளது. இதனூடாக ஒட்டு மொத்தத்தில் மோடி இலங்கையை வளைத்து கைக்குள் போட்டுள்ளார். சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் குறைப்பதற்கான முழு நடவடிக்கையில் இறங்கிய மோடிக்கு இது பெரும் வெற்றி அளித்துள்ளது. இதுவே ஜே.வி.பி. யிலுள்ள இந்திய எதிர்ப்புணர்வாளர்களை கொதி நிலை அடையவைத்துள்ளது.



(தொடர்ச்சி 21 பக்கம்)

(20 பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்துத்தான் இலங்கை பிராந்தியத்தின் பாதுகாப்பை நாம் நிறுவ வேண்டும். அதற்கு இந்தியா போன்ற நாடுகளின் உதவியைப் பெற வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது கட்சியினருக்கும் நாட்டுமக்களுக்கும் சேர்த்து விளக்கமளித்துள்ளார். காலியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே ஜனாதிபதி, இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்து விளக்கமளித்துள்ளார்.

ஏற்கனவே நடந்து வரும் நடவடிக்கைகளை நெறிப்படுத்தி முறைப்படுத்தும் நோக்கத்துடன், இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தானது. இந்தியாவுடனான கூட்டு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி அமர்வுகள் ஏற்கனவே நடைபெற்று வருகிறது. இந்தியாவுடனான சமீபத்திய பாதுகாப்பு ஒப்பந்தம் இந்த தொடர்ச்சியான நடவடிக்கைகளை முறைப்படுத்துகிறது. நாம் முன்னேறுவதற்கு மிகவும் முன்னேறிய நாடுகளின் ஆதரவு அவசியம். கொழும்பு பாதுகாப்பு மாநாடு மற்றும் இந்தியப் பெருங்கடலில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றில் இணைந்து பணியாற்றவும் நாங்கள் ஒப்புக்கொண்டுள்ளோம். இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக ஒரு சர்ச்சை உள்ளது. கவலைப்பட ஒன்றுமில்லை. பிராந்திய பாதுகாப்பை நாம் நிறுவ வேண்டும். மேம்பட்ட மற்றும் திறமையானவர்களின் உதவியைப் பெற வேண்டும். இல்லையெனில், நாம் முன்னேற முடியாது என்றும் அநுரகுமார கூறியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசுக்குச் சர்வதேசத்தின் ஒத்துழைப்பு கிடைக்காது என்றவர்கள் இன்று சர்வதேசத்துக்கு நாட்டை அரசு காட்டிக்கொடுப்பதாகக் குற்றஞ்சாட்டுகின்றார்கள். ஆனால், சர்வதேசத்தின் முழு ஒத்துழைப்புடன் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்பதை நிரூபித்துள்ளோம். எமது அரசை எந்தச் சதி முயற்சியாலும் கவிழ்க்கவே முடியாது என்று ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளரும் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எமது அயல் நாட்டின் தலைவர் நரேந்திர மோடி நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பல்வேறு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுச் சென்றுள்ளார். ஆனால், எதிர்க்கட்சியினர் சர்வதேசத்துக்கு நாட்டை அரசு காட்டிக்கொடுப்பதாக தற்போது குற்றஞ்சாட்டுக்கின்றார்கள். அரசு நாட்டை காட்டிக் கொடுக்கவில்லை. அவர்கள் காட்டிக்கொடுத்தவற்றை நாமே நிறுத்தியுள்ளோம். ரணில் விக்ரமசிங்க மில்கோ நிறுவனத்தை இந்தியாவின் தனியார் நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்வதற்குத் தயாராக இருந்தார்.

ஆனால், நாம் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அந்த ஒப்பந்தத்தை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தோம். நட்டத்தில் இயங்குவதாகக் கூறப்பட்ட மில்கோ நிறுவனம் தற்போது இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது. திரிபோஷா நிறுவனம் விற்பனை செய்யப்படவிருந்தது. ஆனால், தற்போது திரிபோஷ உற்பத்தியை மேற்கொண்டு அதனை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றியுள்ளோம். இதுவே எமது முயற்சியாகும். அதேபோன்று மஹவ - ஓமந்தை ரயில் பாதை மற்றும் மஹவ - அனுராதபுரம் ரயில் பாதை சமிக்ஞை கட்டமைப்பு ஆரம்பத்தில் இந்தியாவின் கடன் உதவி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

ஆனால், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது இந்திய பிரதமர் இந்தத் திட்டங்களை அன்பளிப்பாக வழங்குவதாகக் குறிப்பிட்டார். அதேபோன்று இந்தியாவிடம் இருந்து நாம் கடன்களை பெற்றுக்கொண்டுள்ளோம். தற்போது இந்தக் கடனுக்கான வட்டியைக் குறைப்பதாக இந்தியப் பிரதமர் மோடி எமக்கு வாக்குறுதி அளித்துள்ளார். எதிர்க்கட்சியினர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை முறியடித்து நாம் சர்வதேசத்தின் முழு ஒத்துழைப்புடன் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என்பதை நிரூபித்துள்ளோம். எனவே, எமது அரசை எந்தச் சதி முயற்சியாலும் கவிழ்க்கவே முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே இந்தியப்பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கைக்கான விஜயம் ஜே.வி.பி. - என்.பி.பி. அரசில் முரண்பாடுகளையும் பிளவுகளை ஏற்படுத்திவிட்டுள்ளதுடன் அதனை வெளியுலகத்திற்கும் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது. ஜே.வி.பி. - என்.பி.பி. அரசு ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளும் சிக்கித்தவித்து வரும் நிலையில் தற்போதைய இந்தியப்பிரதமரின் இலங்கை விஜயத்திற்கும் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கும் ஜே.வி.பி.யினரின் உள்ளம் கவர்ந்த சீன அரசு காட்டப்போகும் பிரதிபலிப்புக்கள் இலங்கையில் இந்திய - சீன தலையீடுகளின் நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தவே போகின்றன.


**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் சிறப்பு பூசைகள்**


**80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ**

ஸ்காபறோ நாஸ்டீன் வீதியில் அமைந்திருக்கும்
ஆதிபராசக்தி குரு மன்றத்தில் நிகழும் சிறப்பு பூசைகள் நடைபெறும் நாட்கள்.
10-04-2025 வியாழக்கிழமை காலை 9:00 மணி முதல் 12:30 வரை பங்குனி உத்திர பூசை.
12-04-2025 சனிக்கிழமை காலை 9:00 முதல் பருவபூசை. 13-04-2025 காலை வழமையான பூசை நடைபெற்று, சித்திரை வருடப்பிறப்பு விசேடபூசையும் நடைபெறும்.
அன்னையின் அருள் வேண்டி சிறப்புடன் வாழ அனைத்து சக்திகளையும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு: (647) 436-9647







இலங்கை செய்திகள்
Sri Lanka News




# "காடுகளை பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் மக்களின் காணிகளை அபகரிப்பதையும் அபிவிருத்திக்கு தடையாக இருப்பதையுமே நான் எதிர்க்கின்றோம்"

## பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

காடுகளை அழிப்பது எங்கள் நோக்கமல்ல - காடுகளை பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் மக்களின் காணிகளை அபகரிப்பது மற்றும் அபிவிருத்திக்கு தடையாக இருப்பதையே எதிர்க்கின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் 9ம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.

சுற்றாடல்துறை கௌரவ பிரதி அமைச்சர் அன்ரன் ஜெயக்கொடி மற்றும் காணி, நீர்பாசனத்துறை கௌரவ பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க ஆகியோரின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் ஆகியவற்றின் பாதுகாவலர்நாயகங்கள், காணி ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட தொடர்புடைய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கின் 5 மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்களும் இதில் பங்கேற்றனர். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ அமைச்சர் இ.சந்திரசேகரன், வன்னித் தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய கௌரவ பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களான ம. ஜெகதீஸ்வரன், திலகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காணி, நீர்பாசனத்துறை பிரதி அமைச்சர், வடக்கு மக்கள் எதிர்கொள்ளும் காணிப் பிரச்சினை குறிப்பாக வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் எதிர்கொள்ளும் சிக்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவே கூட்டம் நடத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

இதன் பின்னர் வனவளத் திணைக்கள பாதுகாப்புநாயகம் வடக்கு மாகாணங்களில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் விவரித்தார். குறிப்பாக முன்னைய ஆட்சியில் இது தொடர்பில் விசேட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் வவுனியா மாவட்டச் செயலர் தவிர்ந்த ஏனைய மாவட்டச் செயலர்கள் அதனை முழுமைப்படுத்தவில்லை என்றும் குற்றம்சுமத்தியிருந்தார். அத்துடன் வனவளத் திணைக்களம் வடக்கு மாகாணத்தில் முன்னெடுத்த முன்னெடுத்து வருகின்ற செயற்பாடுகளை முழுமையாக நியாப்படுத்தியிருந்தார்.

அவரது கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து வடக்கு மாகாண ஆளுநர் நிலைப்பாட்டை முன்வைத்தார்.

மிக நீண்ட காலப் போர் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்களது காணிகள் ஆள்நடமாட்டம் அற்ற நிலையில் அவையே காடுகளாக வளர்ந்துள்ளன என்றும் அவற்றை கூகுள் வரைபடம் மூலமே வனவளத் திணைக்களம் வனஉயிரிகள் திணைக்களம் என்பன தமக்குரியதாக அடையாளப்படுத்தி 2012ஆம் ஆண்டின் பின்னர் அரசிதழ் வெளியிட்டுள்ளன எனவும் குறிப்பிட்டார். 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசிதழ் வெளியிடப்பட்டவை தொடர்பில் எந்தக் குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், போரின் பின்னர் கூகுள் வரைபடத்தை மாத்திரம் பயன்படுத்தி, கள அலுவலர்களுக்கும், பிரதேச செயலர், மாவட்டச் செயலர் ஆகியோருக்கும் தெரியாமலேயே அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது என்றும் அதுவே தற்போதுள்ள சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது எனவும் தெளிவுபடுத்தினார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன தமக்குரியதாக 2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெளியிட்ட அரசிதழ்களில் குறிப்பிடப்படும் பகுதிக்குள் மக்கள் முன்னர் வாழ்ந்தமைக்கான கட்டடங்களின் எச்சங்கள், கிணறுகளின் எச்சங்கள், வயல்கள் செய்ததமைக்கான அடையாளங்கள் என்பன இப்போதும் காணப்படுகின்றன என்றும் அவை மக்களின் வாழ்விட மற்றும் வாழ்வாதார நிலங்கள்தான் என்பனவற்றுக்கு இவை சிறந்த சான்று எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதால், மக்களின் வாழ்வாதாரம், குடியேற்றம் என்பன மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகளும் திட்டமிட்ட ரீதியில் முடக்கப்படுவதற்கான அபாயம் காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் மிக நீண்ட காலமாக பேசப்பட்டு வந்தாலும் அதற்கு தீர்வு காணப்படாமல் இழுதடித்துச் செல்லப்படுகின்றது என விசனத்துடன் குறிப்பிட்ட ஆளுநர், மக்களின் காணிகளையும், அபிவிருத்திக்குத் தேவையான காணிகளையும் விடுவிப்பதே தீர்வாகும் என்பதையும் அதனை உடனடியாகச் செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஆளுநரைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர் இ.சந்திரசேகரன், ஆளுநர் குறிப்பிட்ட விடயங்கள் மிகச் சரியானது. இந்த விடயங்களால் வடக்கு மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வனவளத் திணைக்களம் முன்வைத்த காலை எப்படி பின்வைப்பது என்று யோசிக்காமல் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றுக்கு எதிராக மிகக் காட்டமான கருத்துக்களை முன்வைத்தார். வவுனியா மாவட்டத்துக்கு சிங்கள மாவட்டச் செயலர் இருக்கின்றார். அந்த மாவட்டத்துக்கு ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக சிங்களவரான நான் இருக்கின்றேன். அப்படியிருக்கையிலேயே எனக்குத் தெரிந்து மடுகந்த குளத்தின் கீழ் வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்த காணிகளை விடுவிப்பதற்கு மறுக்கின்றது. அது மக்கள் வயல் செய்த காணிகள். சிங்களவர்களுக்கே இவ்வாறான நிலைமை என்றால் தமிழ் மக்களின் நிலைமை சொல்லத்தேவையில்லை. இந்த நாட்டில் போர் உருவாகுவதற்கு காணிப் பிரச்சினையும் பிரதான காரணம் என்பதை மறவாதீர்கள் என்று குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து மாவட்டச் செயலர்கள் ஒவ்வொருவரும் தமது மாவட்டத்தில் இந்த இரு திணைக்களங்களாலும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைப் பட்டியல்படுத்தினர். முன்னைய ஆட்சியில் விடுவிப்பதற்கு தங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் 10 சதவீதத்தையே விடுவிக்க இணங்கியமையும் சுட்டிக்காட்டிய அவர்கள் அது போதாது எனவும் குறிப்பிட்டனர். இதற்கு மேலதிகமாக, விடுவிக்க இணங்கியதைவிட பல காணிகளை புதிதாக காடுகளாக அரசிதழ் வெளியிடுவதற்கு வனவளத் திணைக்களம் கோரியிருப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், இதனாலேயே முன்னைய ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையில் இணங்கிச் செல்ல முடியாத நிலைமை காணப்பட்டதாகவும் குறிப்பிட்டனர்.

வவுனியா மாவட்டச் செயலர், கடந்த ஆட்சிக் காலத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவராக இருந்தவரது அறிவுறுத்தலுக்கு அமைவாகவே தான் செயற்பட்டதாகக் குறிப்பிட்டார். இருப்பினும் வவுனியா மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் மக்கள் தினமும் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் பட்டியல்படுத்தியதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதனும் மேலதிக விடயங்களைத் தெரியப்படுத்தினார்.

வடக்கில் மிகப்பெரும் பாரதூரமான விடயமாக வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றின் செயற்பாடுகள் இருப்பதை ஏற்றுக்கொண்ட சுற்றாடல்துறை பிரதி அமைச்சர், இது தொடர்பில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகக் குறிப்பிட்டார். மேலும், ஜனாதிபதியின் செயலருடன் இது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடலை நடத்துவது பொருத்தமாக இருக்கும் என தீர்மானிக்கப்பட்டது. அதேநேரம், ஆளுநர் ஜனாதிபதியின் பிரதிநிதி என்ற வகையில் ஜனாதிபதியுடன் சந்தித்து அவரின் கவனத்துக்கு கொண்டு செல்லலாம் எனவும் பிரதி அமைச்சர்கள் குறிப்பிட்டனர்.

மேலும், வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் மாவட்டச் செயலர்களால் தமது மாவட்டங்களில் விடுவிப்பதற்கு கோரிக்கை முன்வைத்த காணிகளை மீளவும் களப் பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்வதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# யாழ்ப்பாணத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் படையினர் பாவிப்பில் இருந்த வீதி நிபந்தனைகளுடன் திறந்து வைக்கப்பட்டது



யாழ்ப்பாணத்தில் அதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த வீதியானது 9ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் திறந்து வைக்கப்பட்டது. அச்சுவேலியில் இருந்து பருத்தித்துறை கடற்கரை நோக்கி செல்கின்ற வீதியே இவ்வாறு முழுமையாக புதன் அன்று காலை 6.00 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.





இந்நிலையில் பல நிபந்தனைகளுடன் திறந்து விடப்பட்ட இந்த வீதியால் பயணிகள் பேருந்துகள், பொதுமக்கள் என பலரும் மிகவும் மகிழ்ச்சியாக பயணிப்பதை அவதானிக்க முடிந்தது. இதன்போது அந்த வீதியில் பயணிப்பதற்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு, அதிஉயர் பாதுகாப்பு வலயத்தின் அறிவித்தல்


இந்த வீதியானது பலாலி அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள இராணுவக் குடியிருப்பினூடாகச் செல்லும் வீதியாகும். இந்த வீதியினூடாகப் பயணிக்கும் அனைவரும் கீழ்க்காணும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

1. வீதி திறக்கப்படும் நேரம் மு.ப 06.00 தொடக்கம் பி.ப 05.00 வரை மாத்திரமே.
2. வீதியினுள் பயணிக்கும் வாகனங்கள் இடையில் நிறுத்துதல், திருப்புதல் தடைசெய்யப்பட்டுள்ளது.
3. வீதியில் பயணிக்கும் சந்தர்ப்பத்தில் வீதியின் இருபுறமும் புகைப்படம் எடுத்தல் ஒளிப்பதிவு செய்தல் போன்றவை தடைசெய்யப்பட்டுள்ளது.
4. இந்த வீதியில் நடைபயணங்கள் தடைசெய்யப்பட்டுள்ளது.
5. இந்த வீதியில் பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் தவிர்ந்த ஏனைய பாரவூர்திகள் பயணிக்கத் தடை.
6. இந்த வீதியில் செல்லக்கூடிய வேகம் ஆகக்கூடியது 40 கி.மீ மாத்திரமே.
7. இந்த வீதியில் பயணிக்கும் சாரதிகள் மற்றும் அனைவரும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளக்கூடிய ஆவணங்களை பயணத்தின் போது வைத்திருத்தல் அவசியமாகும்.

மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை மீறுதல் சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய குற்றமாகும்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1141

## (வரலாறும் மரபும்)

## நாச்சிஅம்மன் கோயில்

### பாணன் குளம், நல்லூர்

நல்லூர் பாணன்குளம் நாச்சிஅம்மன் கோயில் பல வழிகளிலும் பக்தர்களின் ஆதரவைப் பெற்று, சிறப்பாக வளர்ச்சி அடைந்து காணப்பட்டது. ஆலய கருவறை மண்டபம் போன்றவை பழுதடைந்து காணப்பட்டமையால், அவற்றைப் புனரமைப்புச் செய்ய வேண்டும் என எண்ணங் கொண்ட ஆலய அர்ச்சகர், 1967 ஆம் ஆண்டு பொதுச் சபையைக் கூட்டி, புனரமைப்புச் செய்ய வேண்டிய அவசியத்தை முன்வைத்தார். இதன் பயனாக உருவாக்கப்பட்ட திருப்பணிச்சபை, இவற்றை நிறைவேற்றியுள்ளது. இதன் பின்னர் நாச்சிஅம்மன் ஆலயத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. அடியார்களின் உதவியுடன் கருவறை, அர்த்த மண்டபம், தரிசன மண்டபம், ஆகியவற்றின் புனருத்தாரண வேலைகள் இடம்பெற்று, 1976 ஆம் ஆண்டு புனராவர்த்தன பிரதி'டா மகா கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் இவ்வாலயத்தில் அலங்கார உற்சவம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதே ஆண்டிலேயே, விநாயகர் விக்கிரகம் பரிவாரமூர்த்தியாக பிரதி'டை செய்யப்பட்டு, நூதன பிரதிஷ்டா கும்பாபி'கம் இடம்பெற்றது.

1978 ஆம் ஆண்டு, அடியார்கள் பலரும் இணைந்து, வள்ளி தெய்வானை அம்மன் சமேத சுப்ரமணிய சுவாமியை பிரதிஷ்டை செய்தனர். தொடர்ந்தும் இவ்வாலயத்தில் சில பல மாற்றங்கள் இடம்பெற்றது. குறிப்பாக 1981 ஆம் ஆண்டு, உள்வீதி, வெளிவீதிகளை வேறாகப் பிரித்து, நாற்புறமும் மதில் கட்டப்பட்டது. 1984 ஆம் ஆண்டு நாற்புற மண்டபங்களும் உறுதியாக்கி அமைக்கப்பட்டதோடு, அன்பரொருவரால் குருவாயூர் அப்பன் சன்னிதானமும் அமைக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து வாகனசாலையும் கட்டப்பட்டது. 1986 ஆம் ஆண்டு, ஆலயத்திற்கான தீர்த்தக்கிணறும், முன் மண்டப முகப்பு வேலைகளும் இடம் பெற்றன.

இவ்வாறான வேலைகள் இடம்பெற்ற பின்னர், 1988 ஆம் ஆண்டு, ஆலய முகப்பில். 30 அடி உயரமுள்ள மணிக்கோபுரம் அமைக்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு இக்கோயிலில் இடம்பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து, அம்பாளுக்கு பாலஸ்தாபனம் இடம்பெற்றது. இவ்வேளையில் கருவறை, அர்த்தமண்டபம், நடேசர்சபை, நவக்கிரக சன்னிதி, வசந்தமண்டபம், அனுமாருக்குரிய மண்டபம், தண்டேஸ்வரி கோயில், யாகசாலை, பலிபீடம் ஆகியனவும் புதிதாக அமைக்கப்பட்டது. 1990 இலும் பல திருப்பணி வேலைகள் இடம்பெற்றுள்ளன. ஆலயத்தின் சிற்ப வேலைகளை, சிற்பாச்சாரியார் அராலியூர் திரு. தில்லையம்பலம் அவர்கள் செய்துள்ளார்கள். கொடிமரம், சப்பறம் ஆகியனவும் இக்காலப்பகுதியில் உருவாக்கப்பட்டது. அத்தோடு, அம்பாளுக்குரிய சித்திரத்தேரும் செய்யப்பட்டது. இத்தகைய அழகிய தேர், திருநெல்வேலியூர் சிற்ப கலைச்சக்கரவர்த்தி ஆறுமுகம் ஜீவரெட்ணம் அவர்களால் உருவாக்கப்பட்டது.

1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் காரணமாக, இவ்வாலயத்தின் நித்திய நைமித்திய பூசைகள் தடைப்பட்டன. இந்நிலையின் பின்னர், 1996 ஆம் ஆண்டு, புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, அந்தரீத பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இடம் பெற்றது. 1998 ஆம் ஆண்டு ஆலயத்திற்கு எதிரேயுள்ள வடகிழக்கு மூலையில், இரண்டு பரப்பு காணி கோயிலுக்கு உரிமையாக்கப்பட்டது. 1999 இல் தேர்முட்டியும் அமைக்கப்பட்டது. 2023 இல் கைலாச வாகனமும் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்தும் ஆலயப் பணிகள் காலத்திற்குக் காலம் இவ்வாறே நிறைவேற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்தின் திருவிழா வருடம் ஒருமுறை பங்குனி மாதத்து சித்திரை நட்சத்திரத்தில் தீர்த்தம் வருமாறு 15 நாட்கள் இடம்பெறுகின்றது.

அன்னையின் பெருமைகளைக் கூறும் ஊஞ்சற் பாட்டு, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பொறியியலாளர் கலாநிதி கந்தையா கணேசலிங்கம் அவர்களால் இயற்றப்பட்டது. கவிஞர் கா.சிதம்பரப்பிள்ளை அவர்கள், அம்பாள் பெயரில் 10 தோத்திரப் பாடல்களை இயற்றியுள்ளார். பக்திப் பரவசம் மிக்க இப்பாடல்கள், அச்சிடப்பட்டு அனைவரும் அறியுமாறு, கோவிலின் உட்பிரகாரச் சுவரில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக, பல தசாப்தங்களாக தனது பக்தர்களுக்கு வேண்டுவன அருளும் கருணைக்கடலாக, தயாபரியாக, நல்லூர் பாணன் குளத்தில் நாச்சிஅம்மனாக எழுந்தருளி, அருள் பாலித்து வரும் அன்னையை, அனைவரும் ஏற்றிப் போற்றுவோம்.

***வளரும்...***



ஸ்ரீலங்கா செய்திகள் / Sri Lanka News

# சட்டவிரோத கடற்றொழிலால் வடக்கில் 56 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பாதிப்பு

## மீனவர்கள் போரடவேண்டிய நிலை ஏற்படும் என எச்சரிக்கிறார் ரவிகரன் எம்.பி

**- ந.லோகதயாளன்**

வடக்கு கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய கடற்றொழில் செயற்பாடுகளாலும், அதிகரித்துள்ள தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளாலும் வடமாகாணத்தில் 46,000ற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்களும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவப் பெண்தலமைத்துவக் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே வடபகுதி மீனவக் குடும்பங்களின் இந்தியஇழுவைப் படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் கடற்றொழில் அமைச்சர் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் வலியுறுத்தியுள்ளார். தவறினால் வடபகுதி மீனவமக்கள் அரசிற்கெதிராக போராட்டத்தில் குதிப்பார்கள் எனவும் கடுமையாக எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றில் 09.04.2025 அன்று இடம்பெற்ற பெறுமதி சேர் வரி தொடர்மான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பெறுமதிசேர் வரி தொடர்பிலான விவதத்திலே கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கியமைக்கு நன்றி. உணவுப்பொருட்களுக்கான வரி குறைக்கப்படவேண்டும். குறிப்பாக அரிசி, சீனி, மா, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களின்மீதான வரி குறைக்கப்படவேண்டும்.

அதேவேளை எனது மாவட்டத்திலும், வடமாகாணத்திலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் சில கருத்துக்களைத் தெரிவிக்கலாமென நினைக்கின்றேன். கிளீன் ஸ்ரீலங்க எனச் சொல்லப்படுகின்ற விடயத்திற்கு மாறாக வடக்கு மாகாணத்திலே சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளின் மோசமான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

முன்னைய அரசாங்கங்களின் காலங்களிலும் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்திருந்தன. இந்நிலையில் தற்போதைய புதிய அரசாங்கத்தின் காலத்திலாவது சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் குறைவடையும் என எதிர்பார்த்திருந்த நிலையில், மீன்பிடி அமைச்சின் உயர் அதிகாரிகளே சுருக்குவலை, வெளிச்சம்பாய்ச்சி மீன்பிடித்தல்போன்ற தடைசெய்யப்பட்ட தொழில்களை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கின்றார்களோ என நாம் எண்ணக்கூடியவாறிருக்கின்றது.

தற்போதைய மீன்பிடி அமைச்சின் உயர் அதிகாரிகள் இலஞ்சம் பெற்று தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை ஊக்குவிப்பதாக மக்கள் தெரிக்கின்றனர். இவ்வாறானநிலை மாறவேண்டும். அதேவேளை முல்லைத்தீவைப் பொறுதனதவரையிலே கசிப்பு, கஞ்சா, ஐஸ், ஹெரோயின் போன்ற போதைப்பொருட்களின் ஊடுவல்கள் அதிகரித்திருக்கின்றன.

அத்தோடு இவ்வாறான சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளும் அதிகரித்திருக்கின்றன இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு யார் காரணம்.

இவ்வாறு இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த கடற்றொழில் அமைச்சர் கரிசனையோடு செயற்படவேண்டும்.

இல்லாவிட்டால் அரசிற்கு எதிராக மக்கள் இறங்கிப் போராடவேண்டிய சூழல் ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்ளவிரும்புகின்றேன். கூட்டுறவுப் பிரதிஅமைச்சரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க அவர்கள் இச் சபையிலே இருக்கும்போதே இதனைச் சுட்டிக்காட்டுகின்றேன்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் குறிப்பாக கடற்றொழில் மேற்கொள்ளும் மாவட்டங்களாக முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் காணப்படுகின்றன. இதனால் பெருமையடைகின்றோம்.

இவற்றில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு சமாசமும், 34 மீனவகூட்டுறவுச் சங்கங்களும், 3,847 மீனவக்குடும்பங்களைச்சேர்ந்த 4,642 மீனவர்களும், 215 மீனவப் பெண்தலைமைத்துவக் குடும்பங்களும், 1,435 பதிவிலுள்ள படகுகளும், 720 பதிவில் இல்லாத படகுகளும் காணப்படுகின்றன.

மன்னார் மாவட்டத்தில் 15000ற்கும் அதிகமான மீனவக்குடும்பங்களும், மொத்தமாக 4,620 படகுகளும், 5000ற்கும் அதிகமான மீனவப் பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் காணப்படுகின்றன்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, கண்டாவளை, பளை ஆகிய மூன்று சமாசங்களில் 25 மீனவக் கூட்டுறவுச்சங்கங்கள், மற்றும் 4,199 மீனவக் குடும்பங்களும், 5,194 மீனவர்களும், 1,691 மீன்பிடிப் படகுகளும், 482 மீனவப் பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் காணப்படுகின்றன.

அதேபோன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் காணப்படுகின்றது. அவற்றில் மொத்தமாக 126 சங்கங்களும், 23,798 மீனவக் குடும்பங்களும் 28,110 மீனவர்களும், 9,169 மீன்பிடிப் படகுகளும், 5000ற்கும் அதிகமான மீனவப் பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறு இருக்கையில் எமது மீனவர்கள்படும் துயரங்கள் எண்ணிலடங்காதவை. குறிப்பாக இந்திய இழுவைப்படகுகளின் சட்டவிரோத இழுவைமடி மீன்பிடி முறையால் மிகவும் மோசமான நிலைக்கு எமது மீனவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதுமட்டுமல்லலாது சூழல்சார் பாதிப்பினையும் நாமும், எமது சமுத்திரமும் எதிர்கொள்கின்றோம். இதனால் கடல்சார் உற்பத்திகள் அற்றுப்போய் எமது மீனவமக்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகின்றது. கடலில் மீன்கள் உற்பத்தியாகி அவை வளர்ச்சியடையும்முன்பே அந்தக் கடல்வாழ் உயிரினங்கள் அழிக்கப்படுகின்றன. அத்தோடு எமது மீனவர்கள் சுதந்திரமாக தங்களது தொழிலை மேற்கொள்ளமுடியாது தாக்கப்படுவதும்இ மீன்பிடி உபகரணங்களை சேதப்படுத்துவதும் வழக்கமாகிவிட்டது.

அதுமட்டுமல்லாது சூழல்சார்ந்து கடலின் அடியில் காணப்படும் கடற்தாவரங்கள், பவளப்பாறைகள், கடல்சார் உயிரினங்களின் உற்பத்தி இடங்கள் அழிக்கப்படுகின்ற செயற்பாடுகளே இடம்பெறுகின்றன. இதனால் கடலையும், கரையையும் நம்பியுள்ள எமது மீனவ சமூகம் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றார்கள்.

எமது மீனவர்கள் சுதந்திரமாகச் செய்துவந்த பாரம்பரிய மீன்பிடித்தொழிலை செய்யவிடாமல் குறிப்பாக இலங்கையில் அங்கீகரிக்கப்படாத பதினெட்டுவகையான சட்டவிரோத மீன்பிடி முறைகள் தற்போது மிக அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் எமது பாரம்பரிய மீனவ நடவடிக்கைகள் அழிந்துபோகின்ற நிலமைகள் காணப்படுகின்றன. இதனால் எமது மீனவர்கள் மீன்பிடித்தொழிலைக் கைவிட்டுச் செல்கின்ற நிலமைகளும் காணப்படுகின்றன.

இவ்வாறான சட்டவிரோத தொழில்முறைகள் அதிகரித்தமைக்கு பொறுப்பற்ற கடந்தகால அரசும்இ அமைச்சும், அரசஅதிகாரிகள் சிலருமே காரணமாகும். இவர்கள் சட்டவிரோதமான தொழில்களுக்கு அனுமதிகளை வழங்கி சாதாரண மீனவர்களதும் நாட்டினது பொருளாதாரத்தையும், வளங்களையும் அழிவிற்கு இட்டுச்செல்ல உறுதுணையாக இருந்தார்கள் என்பதே உண்மை.

அபிவிருத்தி என்றபோர்வையில் கடற்கரையோரங்களில் இடம்பெறும் கனியமணல் அகழ்வு, மற்றும் பண்ணை வளர்ப்பு முறைகள் போன்றவற்றால் எமது மீனவர்கள் தங்களுடைய காணிகளை இழந்துவருகின்றனர். சூழல்பாதிப்புக்களையும் எதிர்கொள்கின்ற சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளது. இதனால் பலமீனவர்கள் தங்களது இறங்குதுறைகளையும் இழந்து தவிக்கின்றார்கள். பல நீர்வாழ் உயிரினங்கள் அழிந்துபோகின்றன.

மீனவப் பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுகின்றன. மீனவர்களின் கரவலைப்பாடுகள் இல்லாமல்போகின்றது. அதுமட்டுமல்ல சமூகச்சீர்கேடான விடயங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இவற்றைக் கண்டுகொள்ளாமல் மக்கள் நலன் சாராத இவ்வாறான திட்டங்கள் எமக்கு அவசியமானதா? என்பது சிந்திக்கவேண்டிய விடயம் - என்றார்.

# இவ்வார ராசிபலன்

## 11-04-2025 வெள்ளி தொடக்கம் 17-04-2025 வியாழன் வரையும்




**மேஷம்:** தனவரவுகள் பெருகும் வாரம். ஞாபகத்திறன் அதிகரிக்கும். தேக பலம் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். தொட்ட காரியம் ஜெயமாகும். முயற்சியில் வளர்ச்சி அடையும். இரகசியம் காப்பது நல்லது. உதவிகள் குவியும். புதிய சிந்தனை உதயமாகும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். பணியில் பாராட்டு கிட்டும். நண்பகலில் நல்ல தகவல் வரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். பொருள்வரவு ஏற்படும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். தெய்வப்பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளைகள் கல்வி மேம்படும். சகோதர ஒற்றுமை பலப்படும். உயர்பதவி யோகமுண்டு. உற்சாகம் களை கட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். நல்ல செய்திகள் நாடி வரும். தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவுகள் நிறைவேறும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிறு உபாதைகள் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். நண்பர்களின் சந்திப்பு நன்மை பயக்கும். திடீர் பயணம் ஏற்படும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வீடு மனை யோகம் உண்டு. எதிர்ப்புகள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோ'ம் கூடும். எதிரிகள் உதிரியாவார்கள். பங்குச்சந்தை லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: *7,9,5,4*

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,P




**ரிஷபம்:** வேண்டாத நபர்கள் விலகும் வாரம். விவாதம் வாக்கு வாதங்களாக மாறும். தொழிலில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். உடல்நலம் சீராகும். வரவுகள் மிகுதியாகும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கடன் தொல்லை தீரும். மன அமைதி அதிகரிக்கும். பெண்களுக்கு அணிகலன் சேரும். அலைச்சல் ஆதாயம் தரும். பால் தானம் பாவம் போக்கும். வெற்றி எட்டும் காலம். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பணதேவைகள் அதிகரிக்கும். பதவி உயர்வு ஏற்படும். நல்லச்செய்திகள் நாடி வரும். இடையூறு அகலும். பிரார்த்தனை நன்மை தரும். கருத்து வேறுபாடுகள் விலகும். தொழில் வளர்ச்சி பெருகும். முயற்சிகள் பலன் கொடுக்கும். பூமியால் நன்மை உண்டு. நட்டமில்லாத திட்டங்கள் நிறைவேறும். மகிழ்ச்சியான செய்திகள் தேடி வரும். சுபச்செலவு அதிகரிக்கும். திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். அவமானங்கள் அகலும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். தேவைகள் அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: *5,9,6,2*

அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,U




**மிதுனம்:** குடும்ப பாசம் அதிகரிக்கும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. உடல்நலத்தில் அக்கறை தேவை. ஆனந்தம் குடிகொள்ளும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். வணிகத்தொழில் வளம் கூடும். உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். பொருளாதார நிலை உயரும். வெகுமதி பெருகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். தொழில் லாபம் கூடும். நன்மைகள் தொடரும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் தரும். எதிரிகள் பலம் குறையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. மிகவும் சுதந்திரமாக செயல்படுவீர்கள். காதல் கசக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: *5,3,1,4*


அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,I




**கடகம்:** சாதகமான சூழ்நிலை அமையும் வாரம். பணப்பற்றாக்குறை நீங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தன லாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் கூடும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். பணிவான பேச்சுக்கள் மன நிம்மதியை தரும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். ஆபரணச் சேர்க்கையுண்டு. மறைமுக எதிர்ப்புகள் விலகும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும் தனவரவு உண்டு. திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத்துறையில் வெற்றிக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பயணம் தவிர்ப்பது நல்லது. அரசு வகையில் ஆதாயம் சேரும். கடன் சுமை குறையும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். வீண் வம்புகள் விலகும். மெத்தனப் போக்கு மாறும். போட்டிகள் உருவாகி மறையும். கமி'ன் தொழில் லாபம் தரும். ஆதாயம் பெருகும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: *2,5,9,4*

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J




**சிம்மம்:** எண்ணிய காரியத்தில் வெற்றி கிட்டும் வாரம். வாழ்த்துக்கள் கிடைக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டு. ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மனோ தைரியம் அதிகரிக்கும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும்.




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


பங்குத்தொழில் கவனம் தேவை. வீண் வம்பு விலகும். உடல்நலம் சீராகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். செயல்களில் நிதானம் தேவை. புதிய முயற்சி பலிதமாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். பணிசெய்யும் இடத்தில் பாராட்டு உயரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். நெருக்கடிகள் குறையும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குடும்பச் சுமை குறையும். ஆபரணத் தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்புகள் வரும். நட்பு வட்டம் விரிவடையும். அற்புதமான காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: *1,5,7,9*

அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**கன்னி:** பெருமைகள் கிடைக்கும் வாரம். பதற்றம் குறையும். பூமியால் லாபம் உண்டு. நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும், வெகுமதியும் கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உறவுகளால் நன்மை ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சி வெற்றி தரும். வழக்குகள் சாதகமாகும். விவசாயம் பலன் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விரோதங்கள் அகலும். உத்தியோக மாற்றம் ஏற்படும். எதிர்கால சிந்தனைகள் ஏற்றம் பெருகும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். தாய்வழி ஆதரவு பெருகும். கல்வியில் பெருமை சேரும். நன்மதிப்பு கூடும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். காரிய வெற்றி கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. பகை மாறும். கௌரவம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *7,5,4,3*

அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,Y




**துலாம்:** அருமையான வாய்ப்புக்கள் அமையும் வாரம். நினைவாற்றல் பெருகும். பணமும், பாராட்டுக்களும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரச்சனை அகலும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். செயல்பாட்டில் கவனம் தேவை. கடன் விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். மருத்துவச் செலவு குறையும். வரவு திருப்தி தரும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். விலகி சென்றவர் விரும்பி வருவர். புதிய சொத்துக்கள் சேரும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். மனச்சுமை குறையும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேச பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கை உண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். உத்தியோக உயர்வு தாமதம் ஆகும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். இலக்கிய ஆர்வம் கூடும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: *8,6,5,4*

அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K




**விருச்சிகம்:** இழந்த கௌரவம் திரும்ப கிடைக்கும் வாரம். தெய்வீகப் பற்று கூடும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சியை தரும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலைகள் காணப்படும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. வெகுமதி தேடி வரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பெற்றோரின் அன்பு கூடும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தாய் தந்தை உதவி உண்டு. மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: *2,4,3,1*

அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,L




**தனுசு:** அசையா சொத்துக்கள் சேரும் வாரம். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். போட்டிகள் உருவாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். சமுதாய விழிப்புணர்வு நல்லது. முயற்சி பலன் தரும். மங்களச் செய்தி வரும். வாகனச் செலவு அதிகரிக்கும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. கடன் பிரச்சனை தீரும்.

**(தொடர்ச்சி *26* பக்கம்)**

WE INVITE YOU TO:

# MOTHER'S day

C.Y.E.C.S

CENTER FOR YOUTH EMPOWERMENT AND COMMUNITY SERVICES

SUPPORTING YOUTH, STRENGTHENING MINDS, UPLIFTING COMMUNITIES

Celebrations, hosted by

**'Centre for Youth Empowerment and Community Services'**



*We will honour and celebrate our*
*Dedicated and Deserved Mothers!*

அர்ப்பணிப்பும் தகுதியும் கொண்ட அன்னையரைக் கௌரவிப்போம்!

Venue: Easttown Banquet Hall
2648 Eglinton Ave. East
Scarborough, ON M1K 2S3

Date: SUNDAY. MAY 11, 2025
from 11:00 AM to 2:00 PM
(Lunch from 1:00 PM to 1:30 PM)

CONTACT: **info@cyecs.org / (647) 891-7725 or (647) 762-9512**

# மரண அறிவித்தல்

## முகுந்தன் கதிர்காமராஜயோகன்

(Sir John A. Macdonald Collegiate Institute பழைய மாணவன்)

**யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்துவந்தவருமான முகுந்தன் கதிர்காமராஜயோகன் அவர்கள் 06-04-2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.**



அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜலிங்கம் - யோக்கியம் (உடுப்பிட்டி), நாகேந்திரம் - மகேஸ்வரி (ஈவினை) தம்பதிகளின் ஆசைப் பேரனும்,
கதிர்காமராஜயோகன் - சரோஜினி தம்பதிகளின் அருமைப் புதல்வனும்,
ஈஸ்வரியின் அன்பு மருமகனும்,
செந்தில்ரூபனின் பாசமிகு சகோதரனும், நிக்கோலின் அன்பு மைத்துனனும். ஜெய்னன், ஏவியானா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் 15-04-2025 செவ்வாய்க்கிழமை மாலை 5:00 மணி முதல் 9:00 மணிவரை 8911 Woodbine Avenue, Markham என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, மறுநாள் தகனம் 16-04-2025 புதன்கிழமை காலை 8:00 மணி தொடக்கம் 12:00 மணி பார்வைக்கு வைக்கப்பட்டு கிரியைகள் நடைபெற்று தொடர்ந்து 2 Stalwart Industrial Drive, Gormley, ON என்னும் விலாசத்தில் அமைந்துள்ள North Toronto Crematorium இல் தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு: கதிர்காமராஜயோகன் (தகப்பன்): (416) 803-0713
சறோஜினி (தாய்): (647) 533-0873
செந்தில்ரூபன் (சகோதரன்): (416) 803-0647

மலர்வு: 31-07-1984
உதிர்வு: 06-04-2025

# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)

**தனுசு:** ஆடம்பர எண்ணம் உருவாகும். பயணம் தவிர்ப்பது நல்லது. கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். பணப்புழக்கம் சரளமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய்கள் அகலும். செல்வாக்கு உயரும். பெயர், புகழ் கௌரவம் உயரும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். மனஅமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். பணிவான பேச்சுக்கள் தேவை. சேமிப்பு வளரும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிர்ப்புகள் அடங்கும். இடமாற்றம் நன்மை தரும். முன்கோபத்தை தவிர்க்கவும். முற்போக்குச் சிந்தனை அதிகரிக்கும். மனப்பாங்கு ஏற்படும். மற்றவர் மீது அன்பு அதிகரிக்கும். உணவு பிரியம் அதிகரிக்கும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். எதிர்ப்புகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 1,9,7,3

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மகரம்:** திருப்புமுனையைச் சந்திக்கும் வாரம். சச்சரவுகள் அகலும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். குழப்பங்கள் நீங்கும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். காதலில் வெற்றிக் காண்பீர்கள். உடல்நலனில் அக்கறை தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குடும்பத்தில் அமைதி நிலவும். அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. வெளியூர் பயணம் உண்டு. இனிப்பான செய்திகள் வரும். வியாபாரம் வெற்றித் தரும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீட்டுத்தொல்லைகள் தீரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். புதுமையை விரும்புவீர்கள். சகோதர வழியில் கவனம் தேவை. மாணவிகளுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தந்திரமாக செயல்படுவீர்கள். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். வம்பு வழக்குகள் தீரும். வேலைப்பளு கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. கடன் வி'யத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். தெய்வ நம்பிக்கைக் கூடும். முயற்சிகள் தாமதம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 4,9,2,3

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R




**கும்பம்:** உறவும், வரவும் கிடைக்கும் வாரம். பதவி உயர்வு கிட்டும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசை பூர்த்தியாகும். பயணம் உற்சாகம் தரும். நண்பர்கள் பாராட்டு கிடைக்கும். உத்தியோக உயர்வு உண்டு. மங்களச் செய்தி வரும். பங்குச்சந்தை லாபம் தரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். பழைய பகை தீரும். பெருமிதம் நிறைந்த காலம். கலவரமான சூழ்நிலைகள் ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். ஆரோக்கியம் சீராகும். இனிய தகவல் வந்து சேரும். சாதனை படைக்கும் காலம். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு இனிக்கும். நீண்ட நாளைய கனவுகள் நிறைவேறும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மன நெருக்கடிகள் தீரும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். பிள்ளைகளால் தன வரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றியைத் தரும். வாய்பேச்சில் நிதானம் தேவை. ஆண்களின் ஆதிக்கம் உயரும். தீர்த்த யாத்திரை உண்டு. பெருமைகள் உயரும். வியாபாரம் செழிக்கும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மன பயம் ஏற்படும். உடம்பில் வலி வந்து நீங்கும். திடீர் பயணம் உண்டு. உடன் பிறப்புக்களால் உதவி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,4,3,2

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,M




**மீனம்:** ஆரோக்கியம் சீராகும் வாரம். திருமகள் கிருபைகள் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். முயற்சிகள் வெற்றி தரும். வேலைப்பளு குறையும். பதவி உயர்வு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். வியாபாரம் சுமாராக இருக்கும். திக்கற்ற நிலை மாறும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவுகள் கூடும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். ஆரோக்கியம் கவனம் தேவை. வியாபாரத்தடை நீங்கும். வீண் வம்பு அகலும். காதல் கை கூடும். விவேக முயற்சி வெற்றி தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. நலமே விளையும் வாரமாகும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. சிறப்புக்கள் சேரும். பங்குச்சந்தை லாபம் தரும். பணவரவு உண்டு. உங்களின் தனித்தன்மை வெளிப்படும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக்கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,Z

# அனுர குமார நாட்டின் ஜனாதிபதியாக வந்த பின்னரும் மன்னாரில் சட்டவிரோத கணிய மணல் அகழ்வுக்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்கிறார் டானியல் வசந்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



(08-04-2025)

அனுர குமார நாட்டின் ஜனாதிபதியாக வந்த பின்னரும் மன்னாரில் சட்டவிரோத கணிய மணல் அகழ்வுக்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் டானில் வசந் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இடம்பெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்ற நிலையில் மத்திய அரசாங்கமும்,ஜே.வி.பி கட்சியும் வடக்கு கிழக்கில் போட்டியிடுகின்றன.

இந்த நிலையில் சூழ்ச்சியான சில நடவடிக்கைகளை அவர்கள் இத்தேர்தலில் முன்னெடுத்து வருகின்றனர். எம்மை கட்டுப்படுத்தி அதிகாரத்தை அதிகாரத்தை செலுத்துவதற்கான ஒரு சூழ்ச்சியை இத்தேர்தலில் பயன்படுத்துகின்றனர்.

நானாட்டான் பிரதேச சபை தேர்தலில் போனஸ் ஆசனமாக ஒரு சிங்களவரை நியமித்துள்ளனர். இத்தேர்தலில் வட்டாரங்களில் அவர்களினால் வெற்றி பெற முடியாது என்று நன்றாக தெரியும்.தமக்கு கிடைக்கின்ற வாக்குகளை வைத்து போனஸ் ஆசனத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நோக்குடன் சிங்களவர்களை போனஸ் ஆசனத்தில் நிறுத்தி உள்ளதாக அவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் இயற்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற நாசகார திட்டங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களை பயன்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கு உள்ளது.

மன்னார் பிரதேச சபை பிரிவில் கணிய மணல் அகழ்வுக்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் ஜே.வி. பி. அரசாங்கம் கூறுகிறது இயற்கைக்கு எதிராக எவ்வித திட்டங்களையும் முன்னெடுக்க மாட்டோம் என்று.

ஆனால் அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் மன்னாரில் பல தடவைகள் கணிய மணல் ஆராய்ச்சிக்காக பாதுகாப்பு தரப்பினரின் பாதுகாப்புடன் இங்கு வருகை தந்துள்ளனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள உணவகங்களில் திடீர் சோதனை

## உணவகம் ஒன்றுக்கு சீல் - மன்னாரில் பொது சுகாதார துறையினர் அதிரடி நடவடிக்கை





(09-04-2025)

மன்னார் - பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதார சீர்கேடுகள் உடன் இயங்கி வந்த இரு உணவகங்களுக்கு எதிராக அன்றையதினம் 9ம் திகதி புதன்கிழமை மன்னார் நகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட் தலைமையில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்ட தோடு, அவற்றில் ஒரு உணவகம் தற்காலிகமாக சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைவாக மன்னார் உப்புக்குளம்-பள்ளிமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள குறித்த இரு உணவகங்களுக்கும் திடீர் என அன்றையதினம் புதன்கிழமை (9) சென்ற மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன் போது அப்பகுதியில் உள்ள ஒரு உணவகத்தில் குறித்த குழுவினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட போது குறித்த உணவகத்தில் கடமையாற்றியவர்கள் சுகாதார பரிசோதனை சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமல் கடமையாற்றியமை, குளிர்சாதனப் பெட்டியில் சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருட்களை சேகரித்து வைத்தமை, உணவுப் பொருட்களை சுகாதாரம் இன்றி பாதுகாப்பற்ற முறையில் தயாரித்தமை உள்ளிட்ட சில குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், குறித்த உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டதோடு,உடனடியாக குறித்த குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அதிகாரிகள் கோரிக்கை விடுத்தனர்.

மேலும் அப்பகுதியில் உள்ள மேலும் ஒரு உணவகம் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அந்த உணவகத்தில் பல்வேறு பிரச்சினைகள் சுகாதார அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டது. குறித்த உணவகத்தில் சுகாதாரமற்ற முறையில் உணவு தயாரித்தல், உரிய முறையில் கழிவு நீர் வடிகான் பராமரிக்கப் படாமை, கழிவுநீர் தொட்டியில் நுளம்பு பெருகும் வகையில் வைத்திருந்தமை உள்ளடங்களாக பாரிய சுகாதார சீர் கேடுகள் உடன் குறித்த உணவகம் இயங்கி வந்தமை அதிகாரிகளினால் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த உணவகத்தை உடனடியாக தற்காலிகமாக சீல் வைத்து மூடப்பட்டுள்ளதோடு குறித்த உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராகவும் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர் வரும் பண்டிகைக்காலங்களையோட்டி மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள உணவகங்களில் தொடர்ச்சியாக திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, மக்கள் விழிப்புடன் இருக்குமாறும் சுகாதார முறையில் உணவுப் பொருட்களை கையாளும் உணவகங்களில் உணவு பொருட்களை பெற்றுக் கொள்ளுமாறும் சுகாதார துறையினர் மக்களுக்கு அறிவுறுத்தி உள்ளதோடு, சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருட்களை கையாளும் உணவகங்கள் தொடர்பாக முறை யிடுமாறும் சுகாதார துறையினர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

# NESAN
# 416-908-5656



Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8









26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca

# UTHAYAN உதயன்







உதயம் 1514 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 11, 2025


## "கிராமத்து வதனம்" தமிழ்ப் பெண்கள் பண்பாட்டு மையம் அமைப்பு நடத்திய "உலக மகளிர் தினக் கொண்டாட்டம்.





கனடாவில் மிக நீண்ட காலமாக இயங்கிவரும்பெண்கள் சார்ந்த அமைப்பான "கிராமத்து வதனம்" தமிழ்ப் பெண்கள் பண்பாட்டு மையம் அமைப்பு நடத்திய "உலக மகளிர் தினக் கொண்டாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று 6ம் திகதியன்று ஈற்றொபிக்கோ நகரில் அமைந்துள்ள **Thistletown Community Centre** மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அன்றைய தினம் 26 பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் அடங்கிய "ஆறாம் நிலத்திணைச் சிறுகதைகள்" என்னும் தொகுப்பும் வெளியிடப்பெற்றமை பெண்களை பெருமைப்படுத்தும் நிகழ்வாக விளங்கியது. அத்துடன் அன்றைய தினம் வதனன் காலாண்டு சஞ்சிகையின் ஜனவரி-மார்ச் மாதங்களுக்கான இதழ் வெளியிடப்பெற்றது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## "அறிவும் ஆடலில் திறமையும் பாடும் குரலும் அழகும் நிறைந்த மாதவி கோவலனுக்கு எழுதிய கடிதங்களை இலக்கியங்களாக நோக்கலாம்"

### "மாதவி வரைந்த மாண்புறு கடிதங்கள்" என்ற தலைப்பில் உரையாற்றிய ஆசிரியை நாகேஸ்வரி குமரகுரு தெரிவிப்பு



"இளங்கோ அடிகளின் படைப்பிலக்கியமான "சிலப்பதிகாரத்தில் வரும் பாத்திரங்களான கண்ணகி.கோவலன். மாதவி மற்றும் வசந்தமாலை ஆகிய பாத்திரங்களில் நடனப் பெண் என்று அறியப்பெற்ற மாதவியானவள் பன்முக ஆற்றல் கொண்டவளாக விளங்கினாள். இவ்வாறான மாதவி அறிவும் ஆடலில் திறமையும் பாடக்கூடிய குரலழகும் அழகும் நிறைந்தவளாய் கோவலனுக்கு எழுதிய கடிதங்களை நாம் இலக்கியங்களாக நோக்கலாம். தனது முதலாவது கடிதத்தை கோவலனுக்கு எழுதிய அவள் கோவலனின் பதிலுக்காகக் காத்திருந்த வேளை அவன் அந்தக் கடிதத்தை கொண்டு சென்ற வசந்தமாலையிடமிருந்து பெற்றுக்கொள்ள மறுத்து விட்டான். ஆனால் தனது முயற்சியை கைவிடாமல் மாதவி மீண்டு இரண்டாவது கடிதத்தை எழுதுகின்றாள்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



## பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கை விஜயம் ஜே .வி.பி. – என்.பி.பி. முரண்பாடுகளை ஏற்படுத்தி வெளியுலகத்திற்கும் காட்டிவிட்டது.

"இந்தியாவுக்கு அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு விரும்பியோ விரும்பாமலோ கொடுக்கும் முக்கியத்துவம் வழக்கமாக சீனா ஆதரவுடன் இயங்கும் ஜே.வி.பி.யின் இடதுசாரி அடையாளத்தை மெதுவாக இழக்க வைக்கத் தொடங்கியிருக்கின்றது என்பது ஜே .வி.பி.யில் உள்ள இந்திய எதிர்ப்புணர்வாளர்களை சினமடைய வைத்துள்ள நிலையில்தான் அண்மைய இந்தியப்பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கைக்கான விஜயம் ஜே .வி.பி.- என்.பி.பி க்குள் புகைந்து கொண்டிருந்த முறுகலை, பிளவுகளை தீவிரப்படுத்தி விட்டுள்ளது"" ---கே.பாலா (தொடர்ச்சி 20ம் பக்கம்)

## கனடிய பெண்கள் கவுன்சில் வழங்கிய "Resonance-2025" பல்சுவைக் கலை விழாவில் ஒன்றாரியோ அரசின் அமைச்சர்கள் கலந்து சிறப்பித்தனர்

கடந்த ஏப்ரல் 6ம் திகதி ஸ்காபுறோ தமிழிசைக் கலா மன்ற கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி "**Resonance-2025**" கலாச்சார விழாவை கனடிய பெண்கள் கவுன்சில் நடத்தியது. இந்த விழாவில் உள்ளூர் கலைஞர்கள் மற்றும் இளைய தலைமுறையினர் தங்கள் கலைத் திறமைகளை மேடையேற்றினர். கனடிய பெண்கள் கவுன்சில் அமைப்பின் தலைவி திருமதி க. ரோகினி விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தனது அமைப்பின் சக அங்கத்தவர்களோடு இணைந்து சிறப்பாகச் செய்திருந்தார். (தொடர்ச்சி 17ம் பக்கம்)





